Chundikuli Branch Library
பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Chundikuli Branch Library

விலை ரூபா 1–25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 8 ஜுலைகஃ 4 இதழ் 163

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-7-1985

பொது மக்களைப்பாதிக்கும்

## அத்தியாவசிய தேவைகளை சீர்குலைக்கமாட்டோம்!

### 4 இயக்கங்களின் முன்னணி உறுதி

(யாழ்ப்பாணம்)

இந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கின்ற நாம் பொதுமக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளை சீர்குலைக்கக் கூடிய நடவடிக்கைகளை இனிமேல் மேற்கொள்ள மாட்டோம் என உறுதியளிப்பதோடு இச் செயல்களை வன்மையாகக் கண்டிக்கவும் செய்கிறோம், என நான்கு விடுதலை இயக்கங்களின் முன்னணியான ஈழத் தேசிய விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

'அத்தியாவசிய சேவைகளைச் சீர்குலைப்பது தற்கொலைக்கு ஒப்பானது' என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரம் ஒன்றில் 'ஈழத் தேசிய விடுதலை முன்னணி இவ்வுறுதிமொழியை வழங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலா). ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர். எல். எவ்), ஈழப்புரட்சி அமைப்பு (ஈரோஸ்) ஆகிய நான்கு இயக்கங்களும் இப்பிரசுரத்தை வெளியிட்டுள்ளன.

அப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

[9-ம் பக்கம் பார்க்க]

● காரைநகரில் நேற்று நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவம்

# வயோதிபர் உட்பட மூவர்பலி - இருவர்காயம்!

## கடற்படையினர் சுட்டதாக மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

**காரைநகர் ஆலடி பஸ் தரிப்பில் நேற்று அதிகாலை நடந்த துப்பாக்கி சூட்டுச் சம்பவத்தில் ஒருவயோதிபர் உட்பட மூன்று பேர் பலியானார்கள். இருவர் காயமடைந்தனர். இருவாகனங்களில் வந்த கடற்படையினர் சுட்டதாக நேற்று நடந்த மரணவிசாரணையில் காயமடைந்த ஒருவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.**

காயமடைந்த ஐந்து பேரில் இருவர் ஸ்தலத்தில் பலியானார்கள், லொறியொன்றின் மூலம் இரு சடலங்களும் காயமடைந்த இருவரும், நேற்று காலை யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டனர்.

சடலங்கள் இரண்டும் சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டன. காயமடைந்த இருவரும் 6ம் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் ஒருவர் வார்ட்டில் பலியானார். மற்றவருக்கு நேற்றுப் பிற்பகல் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. காயமடைந்த மற்றொருவர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படவில்லை அவர் தனியார் ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகக் கூறப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலைக்கு முன்னை நேற்றுக்காலை காரைநகரை சேர்ந்த பலர் காணப்பட்டனர்.

துப்பாக்கி சூட்டுக்கு பலியான ஆ. தம்பையா வெள்ளை வேட்டி, வெள்ளைசேட் வெள்ளை சால்வை அணிந்திருந்தார் வயது 63 தலைமுழுவதும் நரைத்திருந்தது.

பலியான மற்றொருவர் சோதிநாதன் இவரது தலை

(9-ம் பக்கம் பார்க்க)

"இரு கவசவாகனங்களில் வந்த

## சீருடையணிந்தகடற்படையினர் பிரயாணிகளைச் சுட்டனர்"

### மரணவிசாரணையில் காயமானவர்சாட்சியம்

—கா. யோகநாதன் —

இரு கவச வாகனங்களில் வந்த சீருடை அணிந்த கடற்படையினர்தான் காரைநகர் ஆலடி பஸ் தரிப்பில் பஸ்ஸிற்கு காத்து நின்ற பிரயாணிகளை சுட்டார்கள் என்று திட்டவட்டமாக சொல்லுவன். இத் துப்பாக்கி சூட்டினால் எனக்கு காலில் காயம் ஏற்பட்டது"

ஆலடிபஸ் தரிப்பு துப்பாக்கிச்சூட்டில் பலியான 3 பேரின் மரண விசாரணையில் சாட்சியமளித்த காயமடைந்தவரான கனகசபை லம்போதரநாதன் (45 வயது) மேற்கண்டவாறு கூறினர்.

யாழ் அரசினர் ஆஸ்பத்திரி 6ம் வார்ட்டில்மரணவிசாரணை நடத்திய யாழ் நீதவான் எஸ். நாகராசா இவரது வாக்கு மூலத்தை பதிவு செய்தார். வார்ட்டில் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

பிற்பகல் 2 மணிக்கு சத்திர சிகிச்சைக்கு செல்ல விருந்த இவர் சாட்சியமளிக்கக் கூடிய நிலையிலிருக்கிறார் என அந்த வார்ட்டின்டாக்டர் தெரிவித்ததை தொடர்ந்து பிற்பகல் 1-15 மணிக்கு கட்டிலில் கிடந்தபடி சாட்சியமளித்தார்.

காரைநகரை சேர்ந்த சுப்பிரமணியம் சோதிநாதன் '26 வயது,

(9-ம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வீசியதால் திருப்பிச் சுட்டார்களாம்

### "லங்காபுவத்" செய்தி

(கொழும்பு)

காரைநகர் கடற்படைத் தளத்திற்கு அண்மையில் நேற்றுக்காலை ரோந்து சென்ற கடற்படையினர் மீது தீவிரவாதிகள் கைக்குண்டுகளைவீசித் தாக்கினார்கள் என்றும் கடற்படையினர் திருப்பிச் சுட்டபொழுது தீவிரவாதிகளில் ஒருவர் கொல்லப்பட்டாரென்றும் நான்குபேர் காயமடைந்துள்ளனர் என்றும் 'லங்காபுவத்' செய்தித்தாபனம் அறிவித்துள்ளதாக இலங்கை வானொலி கூறியது.

கடந்த சில நாட்களாக தீவிரவாதிகள் பல கொலைகளையும், கொள்ளைகளையும் நடத்தியிருக்கிறார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன எனினும் தாக்குதல் நிறுத்த ஒப்பந்தத்தை பாதுகாப்பு படையினர்தொடர்ந்து அனுசரித்து வருவார்கள் என்றும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது' (து)

## எந்தமுடிவும் மக்களின்முன் வைக்கப்படவேண்டும்

### அஸ்கிரிய மாநாயக்கர் எச்சரிக்கை!

(லண்டன்)

தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணும் எவ்வித உடன்படிக்கையும் மக்களின் ஆதரவையும் ஒப்புதலையும் பெறவேண்டும் என்று இலங்கை அரசை அஸ்கிரிய மகாநாயக்கா எச்சரித்துள்ளார் இத்தகவலை பி.பி.ஸி நேற்றிரவு வெளியிட்டது.

தமிழர்களுடன் ஏற்படும் எந்த உடன்படிக்கையும் கட்சியின் முன்னும், பாராளுமன்றத்தின்முன்னும் சமர்ப்பிக்கபோவதாக ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியிருப்பதற்கு பதிலளிப்பது போல் அமைந்துள்ளது அஸ்கிரிய மகாநாயக்காவின் இந்தக் கூற்று.

உலகின் முதல்ப் பெண் பிரதமராக திருமதி சிறிமாபண்டாரநாயக்க பதவியேற்ற இருபத்தைந்தாவது 'நினைவு தினக் கொண்டாட்டம் ஞாயிறுக்கிழமை மாலை நடந்தபோது கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் உரையாற்றுகையில் அஸ்கிரியமகநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர்களுடன் ஏற்படும் உடன் படிக்கைகள் குறித்து பலம் வாய்ந்த புத்தமதபீடத்தின் உணர்வுகள் பற்றிகேட்ட போது தன்னுட்கியும் மாவட்ட சபைகளும் பயங்கரவாதத்திற்கு முடிவைக் கொண்டு வந்தால் இதற்கு எதிராக யார் யார் எப்படி விவாதிக்க முடியும் என்று திரு ஜெயவர்த்தன பதிலளித்தார்.

வடக்கு, கிழக்கில்

## ஆயுதப்படை முகாம்கள்

### அனைத்துக்கும் உஷார் உத்தரவு

(ஏ. வி. மாணிக்கம்)

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலுள்ள சகல ஆயுதப்படையினரது முகாம்களும் நேற்று முன்தினம் 21ம் திகதி முதல் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

பாதுகாப்புப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் பேரிலேயே சகல ஆயுதப் படையினரும், பொலிஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வடபகுதிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் இடமல்கொட நேற்று கொழும்பிலிருந்து விசேஷ விமானமூலம் யாழ்ப்பாணம் பொலிஸ்தலைமையகத்துக்கு வந்து சேர்ந்தார். இவர் வடபகுதியிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் சென்று பார்வையிட்டார் கிளிநொச்சி, பருத்தித்துறை. வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை ஆகிய

[9ம் பக்கம் பார்க்க]

## மரணவிசாரணை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயைச் சேர்ந்த ஜேகேந்திரன் என்ற வேலைக்காரச் சிறுவன் மரணவிசாரணை நேற்றுக்காலை யாழ் நீதமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் எடுக்கப்பட்டு இன்று காலைவரை ஒத்திபோடப்பட்டது. (க)

AUG 1985

# விளம்பரம்

## விற்பனைக்கு

104/1, அத்தியடிப் பிள்ளையார் குறுக்கு வீதியில் 2½ பரப்புக் காணியில் 5 அறைகள் பாத்றூம். கிணறு மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. மேற்குறிப்பிட்ட விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். இ: பூலோகசிங்கம். 4610

Stop பிறேக் ஒயில் விற்பனைக்குண்டு. வர்த்தகர்கள் விசேடசலுகைக்குத் தொடர்பு கொள்ளவும்: ட்றேட் சென்ரர், Home Finance Ltd., 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2862

செம்மறி ஆட்டுக்கிடாய்கள் விற்பனைக்குண்டு வயது நாலு ஐந்து மாதத்துக்கு உட்பட்டது. தொடர்பு: ''றஞ்சித்'' (குதிரைவாடகை நிலையத்திற்கு அருகாமையில்) 16, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 4605

நல்லூர் செட்டித்தெருவுக்கு அருகாமையில் 1 பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 365, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 4614

பலாலி றோட், வசாவிளான் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ம. குமரேசன், தைலன்கடவை, குப்பிளான். 4581

## வாடகைக்கு

சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் செல்வதற்குச் வசதியாக வட்டுக்கோட்டை, அராலி, சித்தங்கேணி சங்கரத்தை ஏதாவதொரு இடத்தில் வாடகைக்குத் தேவை தொடர்பு கொள்ளவும்: S.M. Kandasamy Gordon Estate, Udapussellawa. 4514

## தவறிவிட்டது

குரும்பசிட்டி, கட்டுவன் பகுதியில் எனது மோட்டார் சைக்கிள் லைசென்ஸ், 1982-84 ஆண்டுகளுக்கான வரிப்பத்திரம், இன்சுரன்ஸ் பத்திரங்கள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்: S வசந்தநாதன், வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம். 4619

## காணவில்லை

எனது சாம்பல் வர்ண றெயின் கோட் தொண்டமனாறு சந்திக்கும் வல்லை பாலத்திற்கும் இடையில் 21-7-85 மத்தியானம் 1-30 மணியளவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் உள்ள விலாசத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். பி சின்னத்துரை. அமுதா டிஸ்பென்சரி, அச்சுவேலி. 4616

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்துவேளாள சமூகத்தைச் சேர்ந்த மேற்கு ஜேர்மனியில் ஏழு வருடமாக உத்தியோகத்தில் இருக்கும் நற்குணமுள்ள செவ்வாய் தோஷம் இல்லாத 35 வயது மணமகனுக்கு பெற்றோர் மணமகள் தேடுகின்றனர். மணமகள் அங்கு போய் விவாகம் செய்யக் கூடியவராக இருக்க வேண்டும். குறிப்புடனும் படத்துடனும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல:4463, C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 4463

## தேவை

நன்கு கழுவிக் காயவைத்த கோழி முட்டைக் கோது மொத்தமாகத் தேவை. தொடர்பு: M G M. Forage Stores, 208, 1st Cross Street, Jaffna. 4437

சிறு பிள்ளையைப் பராமரிக்க பெண் உதவியாளர் தேவை. இருப்பிடம், உணவு, திருப்தியான சம்பளம் தரப்படும் திருமதி நவறஞ்சனி 37 [149], சிவன்பண்ணைவீதி, யாழ்ப்பாணம். 4559

### பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கம் பளை.

## வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப. நோ. கூ. சங்கத்தில் ஏறக்குறைய 3,000 வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு.

கேள்விப்படிவங்கள் ரூபா. 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 1-8-85 நண்பகல் 12 00 மணிக்கு முன்பதாக முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால் மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

வே. தர்மராசா,<br>
பொதுமுகாமையாளர்,<br>
பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.ச.,<br>
பளை.

20-7-85 4612

### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

காலஞ்சென்ற கைலாசம் இரத்தினசிங்கம், கைலாசவாசா, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம் என்பவரின் மரணசாதனமில்லா சொத்தின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

இல: த/ 3894

கங்காதேவி இரத்தினசிங்கம், இரத்தினசிங்கம் கைம்பெண், ''கைலாசவாசா'', திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.

—மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 30-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி<br>
கு. குலசிங்கம்,<br>
பதிவாளர்,

1985-ம் ஆண்டு 5-ம் மாதம் 31-ம் திகதி.

4447

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தொல்புரம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம் நரசிங்கம் என்பவரின் மரணசாதன மற்ற மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. ரி / 241

சோமசுந்தரம் நரசிங்கம் கைம்பெண் நடேஸ்வரி தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

மனுதாரர்.

எதிராக

1. நரசிங்கம் நிர்மலன்.
2. நரசிங்கம் கோகுலன்.
3. நரசிங்கம் மகள் நளாயினி, எல்லோரும் தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுளளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 21-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1985-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி<br>
ஆழ்வார் சிவபாதசுந்தரம்<br>
பதிவாளர்.

தயாரித்தவர்.<br>
க. குணரத்தினம்<br>
மனுதாரின் சட்டத்தரணி.

4548

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### பருத்தித்துறை மாவட்ட நீதிமன்று

வல்வெட்டி பிரதான வீதியில் வசித்து மரணசாதனமின்றி மரணமெய்திய திரு. செல்லப்பா செல்வநாயகம் அவர்களின் மரணச்சொத்து விடயமாக,

மரணமெய்தியவர்.

செல்லப்பா செல்வநாயகம் கைம்பெண் மகேஸ்வரி, பிரதான வீதி, வல்வெட்டி.

மனுதாரர்.

தத்துவம்.<br>
இல: 1220 / T

எதிராக

1. செல்வநாயகம் மகள் மதிவதனி
2. செல்வநாயகம் செல்வச்சந்திரன்
3. செல்வநாயகம் ரவிச்சந்திரன்

பராய மடையாத 4. செல்வநாயகம் மகள் பத்மவதனி

5. அம்பலவாணர் வர்கள் செல்வரட்ணம், 103, ஸ்ரெசன் வீதி, கொக்குவில்.

எதிர்வாதிகள்

மேலே பெயர்கொண்ட மரணச் சொத்துவழக்கு மேலே குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அறிய அதற்கிணங்க பின்னுதிக்கட்டாளை பதியப்பட்டுள்ளது: என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி காலை 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

1985ம் ஆண்டு ஆனி மாதம் 14ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,<br>
பதிவாளர்<br>
ச. நடராசா

வரைவு<br>
மனுதாரின் சட்டத்தரணி<br>
சி. வல்லிபுரம் 4584

## நிர்வாகிகள் தெரிவு

### [சுழிபுரம்]

சுழிபுரம் பறுளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய அபிவிருத்திச்சபை புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: திரு. ஆ. இராசபட்சம், செயலாளர்: திரு. ப. சி. செல்வநாயகம், பொருளாளர்: திரு. கனகசபை, உபதலைவர்கள்: திரு. க. கணபதிப்பிள்ளை, திரு. வே. இராமநாதன், பிரசாரச் செயலாளர்: திரு. ந. சிவசண்முகமூர்த்தி. 12 பேர் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

### யாழப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம் நல்லூர் செட்டித்தெருவில் வசித்த குமாரசாமி லோகேஸ்வரனின் மரணசாதனமின்றி இறந்த மரணச் சொத்துக்கள் சம்பந்தமாக.

காலஞ்சென்றவர்.

லோகேஸ்வரன் கைம்பெண் தவமணிதேவி, 19/1, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். மனுதாரர்

வழ. இல. தத்துவம் /3887

எதிராக

1. லோகேஸ்வரன் கஜேந்திரன்,
2. லோகேஸ்வரன் மகள் அனுசியா
3. லோகேஸ்வரன் மகள் சர்மிலா
4. லோகேஸ்வரன் தனரஞ்சன் எல்லோரும், 19/1, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

பராய மற்றவர் { பராயமற்ற 1ம், 2ம்,3ம் 4ம் பிரதிவாதிகளின் வழக்குபாதுகாவலர் 5ம்பிரதிவாதியாகிய

5 ஐயாத்துரை துரைராஜா, 108, ஐயனார் கோவில் தெரு, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனம் இல்லாத மரணச்சொத்தை நிருவகிப்பதற்காகமேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ளஆள்எவரேனும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ளபின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படலாகாது என்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது.

1985ம் ஆண்டு வைகாசி மாதம் 8ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி<br>
கு. குலசிங்கம்<br>
பதிவாளர்

வரைந்தது<br>
தி. ஜெகதீசன்<br>
மனுதாரின் சட்டத்தரணி<br>
(4573)

## படகுப்பாதை சீர்கேடு

### (திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல படகுப் பாதைகள் இயங்கவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது

திருகோணமலைத் தொகுதியின் வடக்குப்புறத்தில் உள்ள யான் ஓயா படகுப்பாதை, பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டதாக, திருகோணமலைக் கச்சேரியில் அண்மையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் அறிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டிற்கு அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ அறிவித்தார்.

படகுப்பாதைகள் சில சேதப்படுத்தப்பட்டுள்ளன. ஒரு படகுப்பாதையின் மோட்டார் இயந்திரத்தை பாதுகாப்புப் படையினர் அகற்றிச் சென்றுள்ளனர். இன்னும் அந்த இயந்திரம் திருப்பிக் கொடுபடவில்லை இப்படி மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

### யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

கொக்குவில், சம்பியன் லேனைச் சேர்ந்த மரணசாதனமின்றிமரணமெய்திய அமிர்தலிங்கம் சிறீதரன் என்பவரின் மரணச் சொத்து விடயத்தில்,

—மரணமெய்தியவர்.

தம்பி நடராசா,<br>
இல: 13, ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை,<br>
யாழ்ப்பாணம்.

—மனுதாரர்.

வழ. இல. மரணச் சொத்து நியாயாதிக்கம் } 3885

எதிராக:

1. தம்பி சிவராசா, இல. 417, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.
2. சுப்பிரமணியம் குமாரசாமி, 29/1, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
3. எஸ். ஜெயபாலரத்தினமும் பெண்
4. சிதாலட்சுமியும் இருவரும், ஓட்டுமடம்வீதி, யாழ்ப்பாணம்.
5. சாந்தலிங்கம் கனகரத்தினமும் பெண்
6. தேவிகாராணியும்,
7. அமிர்தலிங்கம் மகள் ஜெலட்சுமி,
8. அமிர்தலிங்கம் மகள் யோகலட்சுமி,
9. அமிர்தலிங்கம் மகள் அமிர்தகௌரி

எல்லோரும் இல. 25/14 ஓடை ஒழுங்கை, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

பிரதிவாதிகள்.

மேலே குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1985 ம் ஆண்டு ஆவணி மாதம் 30 ந் நாளன்று முற்பகல் 9- 30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1985 ம் ஆண்டு சித்திரை மாதம் 29ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி<br>
கு. குலசிங்கம்,<br>
பதிவாளர்.

என்னால்வரையப்பட்டது.<br>
மனுதாரின் சட்டத்தரணி.

த.சோமசுந்தரம்,<br>
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிசு,<br>
93/1 மானிப்பாய் வீதி,<br>
யாழ்ப்பாணம். 4577

தென்னாபிரிக்க அவசரகாலச் சட்டம்———

# 3 பேர் பலி, 113 பேர் கைது!

# கலகங்கள் தொடருகின்றன!

லண்டன், ஜூலை 22

**தென்னாபிரிக்காவில் கடந்த சனிக்கிழமை அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டதையடுத்து இதுவரை சுமார் 113 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் 3 பேர் கொல்லப்பட்டனர். கறுப்பர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் தொடர்ந்து கலவரங்கள் இடம்பெற்றுவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.**

தென்னாபிரிக்காவில் கடந்த சனிக்கிழமை 25 வருடங்களின் பின்னர் முதல்தடவையாக அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது இதனைத் தொடர்ந்து இச் சட்டத்தை மீறியதாக ஜொஹனர்ஸ்பேர்க் என்ற நகர் அருகே உள்ள இடமொன்றில் 3 பேர் கொல்லப்பட்டனர்.

'போர்ட் எலிசபெத்' நகரில் சுமார் 113 பேர் வரை கைது செய்யப்பட்டனர் இந் நகரில் தென்னாபிரிக்க அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து சுமார் ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது இவர்கள்மீது நடத்தப்பட்ட பொலிஸ் தாக்குதலையடுத்தே 113 பேர் கைதானார்கள்.

தென்னாபிரிக்காவின் கறுப்பர்கள் வாழும் பகுதிகளில் தொடர்ச்சியாக கலவரங்கள் இடம்பெற்றுவருகின்றன. பொலிஸாரும் ஆயுதப்படையினரும் மிக உக்கிரமாக இவற்றைத் தடுப்பதில் ஈடுபட்டுவருகின்றனர்.

அவசரகாலசட்டத்தையடுத்து கறுப்பர்கள் மீது கொண்டுவரப்பட்டுள்ள வெள்ளையர் ஆட்சியின் கெடுபிடி நடவடிக்கைகளை பிரிட்டன், அமெரிக்கா என்பன வெகுவாகக் கண்டித்துள்ளன. (கி)

## சந்தையினுள் பஸ்வண்டி புகுந்ததில் 28 பேர் பலி!

மணிலா, ஜூலை 22

பிலிப்பைன்ஸில் சந்தை ஒன்றுக்குள் பஸ்வண்டி புகுந்ததில் 28 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர்!

இச் சம்பவம் பிலிப்பைன்ஸின் அற்ரோக் என்ற நகரில் நேற்று இடம்பெற்றது.

மலைப்பாதையில் பஸ் வண்டி ஒன்று வேகமாக வந்துகொண்டிருந்தது. தொடர்ந்து அவ் வண்டி தனது கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி சந்தையொன்றினுள் புகுந்தது. இதனைத் தொடர்ந்தே 28 பேர் கொல்லப்பட்டனர். 70 பேர் காயமடைந்தனர். (கி)

மீண்டும் பூட்டான்———

## பேச்சுக்களில் பங்குபற்றுவது பற்றித் தீர்மானிக்கவில்லை! ஈழம் தேசிய விடுதலைமுன்னணி

சென்னை, ஜூலை 22

பூட்டானில் எதிர்வரும் 12ந் திகதி சமரசப்பேச்சுக்காக மீண்டும் கூடுவது பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை என்று ஈழம் தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

இம்முன்னணி, விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ. பி. ஆர். எல். எவ். ஈரோஸ் ஆகிய நான்கு இயக்கங்களையும் கொண்ட கூட்டமைப்பாகும்.

இலங்கையில் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பாதுகாப்புப் படைகள் தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை மீறிவருகின்றன எனவும் இதனால் பூட்டான் பேச்சுக்களில் மீண்டும பங்குபற்றுவது பற்றித் தீர்மானிக்கவில்லை என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி கூறியுள்ளது.

இதேவேளை கடந்த சந்திப்பின்போது இலங்கை அரசு தரப்பிடம் முன்வைத்த 4அம்சக் கோரிக்கைகளை தாம்தொடர்ந்து வலியுறுத்தி நிற்கப் போவதாக இம் முன்னணி தெரிவித்துள்ளது. அந்த 4அம்சக் கோரிக்கைகளிலிருந்து விலகப்போவதில்லை எனவும் அது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது (கி

★ சோவியத் வீரரை———

## பிரிட்டனின் கடற்படைப் படகு காப்பாற்றியது!

லண்டன், ஜூலை 22

சோவியத்யூனியனின் விமானப்படை விமானி ஒருவரை பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல் ஒன்று உயிராபத்திலிருந்து காப்பாற்றியது.

இச் சம்பவம் நோர்வேக்கு அருகே நேற்று வடகடலில் இடம்பெற்றது

சோவியத்யூனியனின் கடற்படை ஒத்திகை ஒன்று நோர்வேக்கருகில் வடகடலில் இடம்பெற்றுவருகின்றது. இதில் நூற்றுக்கணக்கான சோவியத் கடற்படைக் கப்பல்கள் ஈடுபட்டுள்ளன

இவ் ஒத்திகையின்போதே சோவியத்யூனியனின் விமானி ஒருவர் தமது ஹெலிகாப்டர் சேதமடைந்ததையடுத்து கடலில் வீழ்ந்தார்.

இதனைத்தொடர்ந்து 'நியூகாசில்' என்ற பிரிட்டனின போர்க் கப்பலின் துணைப்படகு ஒன்று விரைந்துசென்று அவ் வீரரைக் காப்பாற்றியது.

சிறுகாயத்துடன் அவ் வீரர் உயிர் தப்பினார் என்று கூறப்பட்டது பின்னர் அவ் வீரரை வேறொரு சோவியத் ஹெலிகாப்டர் அதன் விமானத் தாங்கிக் கப்பலுக்கு கொண்டு சென்றது

இந்த வடகடல் சோவியத் ஒத்திகையைப் பார்வையிட பிரிட்டிஷ் படைகளுக்கு 'நேட்டோ' அமைப்பின் சார்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (கி)

## அத்திலாந்திக் கறுப்புப்பெட்டி தகவல்கள்

(லண்டன்)

அத்திலாந்திச் சமுத்திரத்தில் விழுந்த இந்திய விமானத்தின் கறுப்புப் பெட்டிகளின் தகவல் பதிவு நாடாக்களைப் பற்றி சோதனைசெய்த விஞ்ஞானிகள் இது பற்றிய முடிவை இப்பொழுது தெரிவிப்பது இயலாதகாரியம் என்று தெரிவித்துள்ளனர். (து)

# திருமலை மாவட்ட தபால் சேவை பாதிப்பு!

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத் தபால் சேவை பற்றி பொது மக்களிடம் இருந்து ஏராளமான புகார்கள் வந்திருப்பதாக திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. கபிலஸ் பெரினண்டோ அறிவித்திருக்கின்றார்

இக்குறைபாடுகளை நீக்கி தபால் சேவைகளைத் திருப்திகரமானமுறையில் பொதுமக்களுக்கு வழங்க மாவட்ட தபால் சேவைகள் அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

திருமலைக் கச்சேரியில் நடந்த மகாநாடு ஒன்றில் அரசாங்க

(7-ம் பக்கம் பார்க்க)

கள்ளக்கடத்தலைக் கண்டித்து

# மாதகலில் மீனவர் ஆட்சேப ஊர்வலம்!

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற்பகுதியில் இடம்பெற்றுவரும் கள்ளக் கடத்தல் நடவடிக்கைகளுக்கு பலத்த ஆட்சேபம்தெரிவிக்கும் வகையில் கடந்த சனிக்கிழமையன்று மாதகல் பகுதி மீனவர்களினால் ஊர்வலம் ஒன்று பண்டத்தரிப்பு சந்திவரை நடாத்தப்பட்டது.

இந்த ஊர்வலம் மாதகல் துறைமுக சந்தியிலிருந்து ஆரம்பமாகி பண்டைத்தரிப்பு சந்திவரை வந்து பின்பு மீண்டும் மாதகலை சென்றடைந்தது. இந்த ஊர்வலத்தில் பின்வரும் சுலோக அட்டைகள் எடுத்துச் செல்லப்பட்டன.

★ கள்ளக்கடத்தலை நிறுத்து! மீனவர்களை வாழவிடு; பட்டினிச் சாவிலிருந்து காப்பாற்றி!

★ இயக்கங்களின்பெயரைச் சொல்லி கள்ளக்கடத்தலா? இயக்கங்களே இது உங்கள் கண்களுக்கு தெரியவில்லையா?

கள்ளக்கடத்தல் காரர்கள் பஞ்சுமெத்தையிலே! அப்பாவி மீனவர்கள் பட்டினிச்சாவிலே.

கள்ளக்கடத்தல் காரர்கள் கடத்தலில் ஈடுபடும்போது கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள். ஆனால் உயிரிழப்பது கடலில் மீன்பிடிக்கும் அப்பாவி மீனவர்களே!

இந்த ஊர்வலத்தில் சுமார் 1500 பேர் கலந்து கொண்டனர்.

# பூட்டோ மகனின் மரணம் பிறந்த நகரில் பெரும்சோகம்!

## தந்தை சமாதி அருகே நல்லடக்கம்!!

லக்னோ, ஜூலை 22

முன்னாள் பாகிஸ்தான் அதிபர் சுல்பிகார் அலிபூட்டோவின் மகன் ஷாநவாஸின் மரணம் பாகிஸ்தானில் அவர் பிறந்த நகரமான லக்னோவில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு நூற்றுக்கணக்கான மக்கள் பூட்டோவின் இல்லத்துக்குச் சென்று தமது அனுதாபங்களைத் தெரிவித்துவருகின்றனர். அத்துடன் கடைகள் மற்றும் பொதுஸ்தாபனங்களும் பூட்டப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

லக்னோ நகர் அமைந்துள்ள சிந்து மாநிலத்தில் பல்வேறு பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர்கள் ஷாநவாஸின் மரணத்துக்கு அஞ்சலி செலுத்தினர்

பூட்டோவின் புதல்வியான பெனாஸிர் பூட்டோ தமது சகோதரனின் மரணக்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக லண்டனிலிருந்து பாகிஸ்தான் வரவுள்ளார்.

கடந்த 5 வருட காலமாக பாகிஸ்தானில் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் 18 மாதங்களுக்கு முன்னரே விடுதலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

பூட்டோவின் மகனது மரணச்சடங்குகளைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசுக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நிகழலாமெ என அஞ்சப்படுகிறது.

இதனால் இம்மரணச்சடங்குகளில் பூட்டோவின் கடசியான மக்கள்கட்சி ஆதரவாளர்கள் கலந்து கொள்வதில் தடைகள் விதிக்கப்பட்டுவருகின்றன எனவும் தெரிவிக்கப் பட்டது

இதேவேளை தென்பிரான்சில் இறந்த பூட்டோவின் மகனது மரணம்பற்றிய புலன் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன பூர்வாங்க விசாரணைகள் முடிந்ததும் சடலம் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பாகிஸ்தான் அதிபர் ஸியாவுல் ஹக், பிரதமர் ஜுனைத் ஆகியோரும் அவரின் மறைவுக்கு அனுதாபந்தெரிவித்துள்ளனர்.

சிந்து மாநிலத்தில் பூட்டோ நல்லடக்கஞ் செய்யப்பட்ட இடத்துக்கருகில்அவரது புதல்வர் ஷாநவாஸின் பூதவுடலும் அடக்கஞ்செய்யப்படும் என்று கூறப்பட்டது.

ஷாநவாஸ் 'அல்சுல்பிகார்' என்ற ஆயுதந்தாங்கிய ஷியாவுல் ஹக் ஆட்சிக்கு எதிரான இயக்கத்தின் இராணுவத்தளபதியாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

பண்டத்தரிப்பு எரிபொருள் நிலையத்திற்கு———

# தொடர்ந்தும் எரிபொருள் வழங்குமாறு கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு எரிபொருள் விற்பனை நிலையத்தில் நீண்ட காலத்திற்கு பின்பு அண்மையில் எரிபொருள் விற்பனை இடம்பெற்றது என்றும், தொடர்ந்து இந்த நிலையத்தில் இப்பகுதி பொதுமக்களுக்கு தேவையான பெற்றோல் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளரை சில்லாலை கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி கடித மூலம் கேட்டுள்ளார்.

இந்நிலையத்தில் எரிபொருள் விநியோகம் நடைபெற்றதினால் விவசாயிகள், வாகனச் சொந்தக்காரர்கள் மற்றும் பலர் பெரும் நன்மை பெற்றிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மணிவாக்கு

தான் உண்மையென்று கண்டதை உரைப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அதேசமயம் அது தவறென்று காணும் மற்ற ஒவ்வொருவருக்கும் அவரை தட்டிவிழுத்தும் உரிமை உண்டு.

— டாக்டர் சாமுவேல் ஜோன்சன்.

# நமது நோக்கு

## தீராநோய் தீர்ப்பதற்கு ஒரு வழி

தடுக்கமுடியாததை தாங்கியே தீரவேண்டுமென்று ஒரு ஆங்கில வாசகம் உண்டு.

இக்காலத்தில் அற்ப நோயை, மனக்குழப்பத்தை தாங்கமுடியாது அதனை மாற்ற 'இன்ஸ்ரன்' குளிகை தேடுவது சாதாரணமாகிவிட்டது.

அமெரிக்கா போன்ற குபேர நாடுகளில்; தொழில் அதிபர்கள், உயர் நிர்வாகிகள் தலைவலி தொடக்கம் குடல்வால் அழற்சிவரைக்கும் எதற்கும் உடனடி நிவாரணம் வைத்திருக்கின்றனர்.

வேக வாழ்க்கையின் சக்கரத்தில் அகப்பட்டு அந்தரிக்கும் தொழில் மன்னர், விவசாய விஞ்ஞான விற்பன்னர் தாமும டப்பியில் தேவைப்படும் குளிகைகள் கொண்டுசெல்வது சாதாரணம்.

எனவே துன்பத்தை தாங்கும் சக்திபற்றி போதனை செய்வதில் அதிக பலன் இல்லை.

இவ்வித சடுதி சுகவீனத்துக்கு சடுதி சிகிச்சைஅளிக்கும் வைத்தியமுறை வேறு சில வருத்தங்களை கொண்டு வந்துசேர்த்துவிடும்.

இவ்வித வருத்தங்கள் நீண்டகாலம் சென்றால் அவற்றை ஆங்கிலத்தில் chronic என்ற நிலை ஏற்பட்டால் வைத்தியம் அதிக பலனளிக்காத கட்டம் நேரிடும்.

உலகனைத்திலும் இவ்வித கட்டத்தில் வாழும் பிறவிகள் ஏராளம்; வாழ்வுமில்லை சீக்கிர சாவுமில்லை, என்ற இரண்டுங்கெட்ட நிலையில் வைத்தியத்தில் நம்பிக்கை இழக்கின்றனர். எனவே வாழ்வில் அதிகபலன் இல்லை என்ற மனவிரக்தியில் மூஞ்சை'யை நீட்டிய கூட்டத்தினருடன் சேர்கின்றனர். இனம் இனத்தை நாடுவது இயற்கை தானே!

மாறாத் தலைவலி, கிறனிக் காக்கைவலி, நீண்டகாலத் தும்மல், கம்மல், இருமல், சிறுகுடல் அழற்சி, பெருங்குடல் அழற்சி, காமாலை, கொடியவாதநோய், பித்தத்தின் பலவித கோளாறுகள், தொய்வு, பீனிசம் என்று ஆயிரக்கணக்கில, கிறனிக் நோய்களை அடுக்கிக்கொண்டு போகலாம்.

இவற்றிற்குப் பலியானவர் பலர் ஒன்றுகூடி பேருபாயம் ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

இந்தப் புதுமுறை வைத்தியம்; அமெரிக்காவைவிட வேறெந்த நாட்டில் காண முடியும்?

சோவியத் ரஷ்யாவில் மருத்துவம், சத்திரசிகிச்சை முறை திறம்பட முன்னேறியபோதும் நாம் குறிப்பிடும் புதியமுறை அங்கு உருவெடுக்க உதவும் தனி மனிதன் சுதந்திரம் அங்கு இல்லை.

இதில் என்ன பிரமாதம்? இந்த முறையை அறிய தீராத நோயால் நலிவுறும் பலவாயிரக் கணக்கானோரி, அவாக்கொள்வது சகஜம்.

ஐக்கிய அமெரிக்காவில்; குறிப்பாக சிக்காகோ, நியூயோர்க், சன்பிரான்ஸிஸ்கோ போன்ற பெருநகரங்களில் ஒவ்வொரு நோய்க்குரிய உதவி வழங்கும் மன்றங்கள் செயற்படுகின்றன. இவ்வித மன்றங்கள் மருத்துவசாலைபோல் தொழிற்படுவதில்லை.

இங்கு கூடும் நோயாளிகள் தாங்கள் மனிதரே என்றும், டாக்டர் தங்களை நோயாளிகள்என்று கருதுவதால் தங்களின் இயல்பான மனிதத்துவம் குன்றிவிடுகிறதென்றும் கருதுகின்றனர்.

தீராத நோயென்று கணிக்கப்பட்ட நோயாளி இம்மன்றத்துக்கு வரும்போது தமக்கு வைத்தியம் செய்த டாக்டர்களை தும்பு பறக்க திட்டுவது முதல் செயலாகின்றது ஈற்றில் புன்சிரிப்பே அவர் முகத்தில் தவழும்.

36 வைத்தியர்களிடம் மருந்துண்ட ஒரு பெண்மணி இம்மன்றத்தில் நோய் நீங்கி ஆறுதல் அடைந்ததாகக் கூறுகிறார்.

விடயம் இதுதான். இன்றையமருத்துவ முறைகளில், வியாதியாளருக்கு எடுத்த எடுப்பிலே மருந்துகொடுப்பதும் தொடர்பான அவ்வித வைத்தியத்தில் புதிய வியாதிகள் உருவெடுப்பதும் பெருங்குறையென காணப்படுகிறது.

இன்னொன்று: சிலவியாதிகள் மனிதருடன் சேர்ந்து வாழ வந்தவை. இவற்றை நாம இவ்விதமன்றங்களில் தான் உணரமுடிகிறது.

'தொய்வு' என்றதீராத தொல்லையால் அமுக்குண்டு வாழ்பவருக்கு தகப்பன், தாய், மனைவி, மக்கள் எவ்வித உதவியும் செய்யமுடியாது. ஆனால் இவ்வியாதியாளருடன் ஒருமித்து வாழ்ந்து துன்பத்தில் சுகம் விசாரித்து அளவளாவுதல் தீராநோய்தீர்க்கும் வழி என்று கொள்ளப்படுகிறது

நெடுங்காலநோய் வாழ்வின் நம்பிக்கை ஒளியை மங்கச் செய்கிறது. நோயாளர் ஒன்று சேர்ந்து, ஒருவரை ஒருவர் உற்சாகப்படுத்தி, நோய்க்குரிய நவீன வைத்தியத்தை பெறுவதற்கும் இத்தகையமன்றங்கள் உதவுகின்றன.

அது எவ்வாறாலும் மருத்துவத்தில் நம்பிக்கை இழந்தவர்களுக்கு இத்தகைய நவீன அணுகுமுறை ஒரு வரப்பிரசாதம்.

நாம் நோயாளிகள் அல்ல; சமூகத்தொண்டராக மாறிவிடமுடியுமானால், நோய் தன்பாடு நான் என்பாடு என்ற செய்தி இன்றைய உலகுக்கு அவசியம்.

### இளைப்பாறுகிறார்

(வவனியா)

வவனியா தபால்நிலையத்தில் மேற்பார்வை பிரதம அதிகாரியாக கடமையாற்றிய திரு. வல்லிபுரம் அடுத்த மாதத்துடன் இளைப்பாறுகின்றார்.

★ இன்று குருபூசை

# சைவப்பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்கள்

நாவலர் என்றால் ஆறுமுகநாவலர் அவர்களையே குறித்தல் போன்று, சைவப் பெரியார் என்றால் புலோலியூர் சு. சிவபாதசுந்தரம் அவர்களையே குறிக்கும் இவ்விருவருக்குப் பின் சில நாவலர்களும், சைவப் பெரியார்களும் தோன்றினாலும், இவ்விருவருவரின் தனித்துவம், சைவசித்தந்த அறிவு; சைவச் சேவை முதலியன வியக்கத்தக்கவை, போற்றத் தக்கவை,

சைவப் பெரியார் அவர்கள் இந்நூற்றாண்டின் முற்பகுதியில் ஆசிரியராகவும், அதிபராகவும் (Victoria College, Chulipuram). சைவப் பிரசாரகராகவும் அரிய சேவை ஆற்றியது இக்காலத்தவர்களுக்குத் தெரியாதிருக்கக்கூடும். தமது நூல்கள் மூலமும் தமது மாணவ சந்ததியார் மூலமும் இவர் இன்றும் பலர் நெஞ்சில் வாழ்கின்றார். ஆசிரியர் என்ற முறையில் மிகநுணுக்கமாகப் பிள்ளைகளின் சிந்தனா சக்தியை ஊக்குவித்தார். பாடங்களில் விருப்பத்தை ஏற்படுத்தினால், பிள்ளைகள் தாமாகவே கற்கக் கூடிய முறையைப் பின்பற்றினார். இவர் கற்பித்த பாடங்கள் கணிதம், ஆங்கிலம், தர்க்க சாஸ்திரம் முதலியன. பெரியாரிடம் ஆங்கிலம் படித்தவர்கள், ஆங்கிலேயன் எழுதிய மொழியிலேயே பிழை பிடித்து விமர்சிக்கக் கூடிய அறிவைப் பெற்றிருந்தார்கள். வேறுபாடசாலைகளில் சற்றும் முன்னேற்றமடையாத பிள்ளைகளைச் சர்வகலாசாலைகளில் சிறப்புப்பட்டம் பெறச்செய்த பெருமை பெரியாரைச் சாரும். அக்காலத்தில் பிரத்தியேகக் கற்பித்தல் [Private Tuition] ஒருவரும் கேள்விப்படாததொன்று. ஆசிரியர் சனி, ஞாயிறு வகுப்புகள் நடத்தினார். அதற்குச் சன்மானம் சற்றும் எதிர்பார்ப்பதில்லை. இந்த வழக்கம் கால் நூற்றாண்டுக்கு முன்னும் இருந்தது. பிரத்தியேகப் படிப்பித்தல் [Private Tuition] அக்காலத்தில் மிகமூளை வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்குப் பணக்காரப் பெற்றோர் நடத்தியதுண்டு இத்தகைய போதனையால் முன்னேறியவர்கள் மிகமிகச் சிலரே.

### குருத்துவம்

அதிபர் என்ற முறையில் பெரியார் தன் மாணவர்களுக்கு ஒரு உண்மையான குருவாக விளங்கினார். கல்லூரியை விட்டுவெளியேறிய பின்பும், மாணவர்கள் குருவினுடைய வாழ்க்கை அம்சங்களைப் பின்பற்றி வாழ்வாங்கு வாழ வழிவகுத்தார். ஒரு சைவசித்தாந்தப் பரம்பரையைத் தோற்றுவித்தார். மெல்லிய நெடிய உருவம், சைவமுறையில் சிறு குடுமி, ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலத்தில் கல்லூரி அதிபர் பதவி வகித்தாலும் மேலங்கி அணிவதில்லை. ஆறணியன் சால்வையால் உடம்பின் மேற்பாகத்தைப் போர்த்தல் வழக்கம்; எந்நேரமும் நெற்றியில் வீபூதி துலங்கும். இப் பெரியார் பேசுவதில் மிகச் சிக்கனம். ஒவ்வொருவசனமும் அளந்துபேசுவார், மேலதிகாரிகள் ஆங்கிலேயரோ மற்றையோரோ வாதத்தில் இவரை வென்றது கிடையாது. ஆசிரியக் கல்லூரி அதிபர்களும் பெரியாருடைய படிப்பித்தல், நிர்வாக முறைகளை மெச்சினதுண்டு இவருடைய முறைகளிற் சிலவற்றைப் பின்பற்றி வெற்றிகண்டவரில் நானும் ஒருவன். தமிழ் என்றால் சைவம் என்ற நம்பிக்கையில் எங்கள் கல்லூரியில் நாலாம் வகுப்புத்தொடக்கம் ஏழாம் வகுப்புவரையில் நான்கு வருடங்களும் தமிழ்ப் பாடப்புத்தகங்களாக வசனத்திற்கு ஆறுமுகநாவலரின் பெரிய புராணமெனச் சொல்லப்படும் திருத்தொண்டர் புராணம், பாட்டிற்கு மாணிக்கவாசக சுவாமிகளின் சரிதமாகிய திருவாதவூரடிகள் புராணமும் கற்றனம். இப்புராணத்திற்குச் சைவப்பெரியாரின் மைத்துனராகிய ம. க. வேற்பிள்ளை அவர்கள் எழுதிய உரை மிகமிகச் சிறப்பானது.



### தேசியக்கல்வி

ஆங்கிலேயர் எங்கள் நாட்டிற்குள் இறக்குமதி செய்த சில கல்வி முறைகளில் பெரியாருக்குச் சற்றேனும் நம்பிக்கையில்லை. அவற்றுட் சில பரிசளிப்பு விழாவும் விளையாட்டுப் போட்டியுமாம். ஆனால் மாணிக்கவாசக சுவாமிகளின் குருபூசையன்று அவர்களின் படத்தைச் சோடித்துக்

**க கிருஷ்ணபிள்ளை**
(முன்னைநாள் அதிபர்)

கதிரை வாகனத்தில் ஏற்றி, அயற்கிராமங்கள் தோறும் மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்ல ஒழுங்கு செய்தார். அரிவு வெட்டுக் காலத்தில் பிரத்தியேக விடுதலை விடுவார். கல்லூரியில் பந்தாடுதல் முதலிய மேல் நாட்டு விளையாட்டுகள் நடைபெறவில்லை அக்காலத்துப் பொருளாதார நிலைக்கேற்பப் பிள்ளைகளுக்குக் கல்வியாவும் உடல் உரமும் வேண்டுமென்றும், கமத்தொழில் மூலம் வேண்டிய உடற்பயிற்சியைப் பெறலாமென்பதும் அவரது நம்பிக்கை.

சைவசித்தாந்தம் பற்றிப் பொரியார் தமிழிலும் ஆங்கிலத்திலும் நூல்கள் இயற்றியுள்ளார். கீழ்வகுப்புப் பிள்ளைகளுக்குச் சிறந்தது சைவபோதம். இவரது திருவருட் பயன் உரைக்கு நிகரான நூல் இன்றுவரை வெளிவரவில்லை. தமிழர் அல்லாதவர்கள் சைவசிந்தாந்தம் படிக்க உதவக்கூடிய நூல் Saiva School of Hinduism சுமார் அரை நூற்றாண்டுக்கு முன் இந்நூலை வெளியிட்டவர்கள் இங்கிலாந்திலுள்ள ஒரு அச்சகத்தார். இவருடைய ஆங்கில வசன நடையை மெச்சினவர் பலர். இந்நூல் இன்றும் காசி இந்து சர்வகலாசாலையில் [Benaras Hindu University] தத்துவஞானப் பட்டப்படிப்புக்கும் சிறப்புப் பட்டப்படிப்புக்கும் பாட நூலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. பெரியார் பூதவுடல் நீத்தபின் வெளியாகிய நூல் Glories of Saivaism

1942 — 1943 - ம் ஆண்டளவில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்தக் குழுவில் பெரியார் ஒரு அங்கத்தவராகச் சேவை செய்தார். இக்குழுவே இலவசக் கல்வியை இந்நாட்டிற்குப் புகுத்தியது. இக்குழுவால், பெரியாரின் முயற்சியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை இலங்கையின் எல்லா ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலும் சுத்த சைவபோசனத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யவேண்டுமென்பதே.

### சீர்திருத்தவாதி

புகழை எள்ளளவும் விரும்பாது சமயப்பணியில் முன்னின்றவர் பெரியார் யாழ்ப்பாணத்தில் எவ்விடத்திலாவது ஒரு இந்து எக்காரணம் பற்றியும் சமய மாற்றத்திற்கு உடன்பட்டால் அதனைத் தடுப்பதற்குச் சகல உதவியும் செய்தார். சைவர்களல்லாத அரசாங்கக்கல்வி உத்தியோகத்தர்கள் சைவக்கல்லூரிகளில் சைவ சமயம் பற்றிக் கிண்டல் செய்தால் அதைச் சற்றும் பொறுக்க மாட்டார். அத்தகைய செயலுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுத்து வந்தார். சைவக்கோயில்களில் மிருகபலியை நிற்பாட்ட முன்னின்று வெற்றி கண்டார் பெரியார் அதிபர் பதவியிலிருந்து இளைப்பாறியதும் மிக இரகசியமான முறையில் 1934 - ம் ஆண்டு ஆனி மாதம் ஒருநாட் காலை அவருடைய கொட்டிலில் வெளித்திருந்தது சிலபொருட்களையும் ஏற்றிக் கொண்டு கந்தவனக்கடவை முருகன்கோயில் வீதியிலுள்ள கொட்டிலுக்குச் சென்றுவிட்டார். சில பெற்றோர் இவருக்குப் பிரியாவிடை ஒழுங்கு செய்யச், சம்மதங் கேட்டபோது சுழிபுரம் பத்திரகாளி கோயிலில் மிருகபலியை நிற்பாட்டியபின் பிரியாவிடையைப் பற்றி யோசிப்போமென்று சொன்னார்.

அதிபர் இளைப்பாறி பின் காசி இந்து சர்வகலாசாலையில் சிலகாலமேனும் கடமையாற்றும்படி வேண்டுகோள் விடப்பட்டது. அதனை ஏற்க மறுத்து பொலிகண்டியிலுள்ள கந்தவனக்கடவை கந்தசாமி கோயிலில் 1934-ஆம்ஆண்டு தொடக்கம் 14 - 8 - 1953 வரைக்கும் முருகவழிபாட்டில் காலத்தைக் கழித்தார். அக்காலத்தில் திருக்கேதீச்சரச் சிவன் கோவிலிலும் சில தொண்டுகள் செய்தார் பெரியாரிடம் கல்வி கற்றவர்கள் பாக்கியசாலிகள், அதிட்டசாலிகள், பெரியாரின் சைவத் தொண்டும், கல்வித் தொண்டும் அவருடைய நூல்கள் மூலமும் மாணவ பரம்பரை மூலமும் என்றென்றைக்கும் நிலைக்குமென்பது திண்ணம்.

## ஓய்வூதியம் பெறுவோரில் இறப்பவர்களின் பெயரை அனுப்புமாறு பணிப்பு

(சித்தங்கேணி)

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியம் பெறுவோரில் இறப்பவர்களின் பெயரை மாதாந்தம் அனுப்பிவைக்குமாறு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் கிராமசேவை அலுவலர்களுக்கும், பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கும் சுற்று நிருபம் மூலம் பணித்துள்ளார்.

இச்சுற்று நிருபம் யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் சகல கிராமசேவை அலுவலர்களுக்கும், பிறப்பு, இறப்பு பதிவாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

# பூட்டான் மாநாடு நிறைவேற்றிய சாதனை!

பூட்டானில் ஆகஸ்ட் 12ஆந் தேதி மீண்டும் ஆரம்பமாகும் இலங்கை இனப்பிரச்னை குறித்த பேச்சுக்கள் நிச்சயம் ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்துவதாக அமையவேண்டும்'' என்று இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ள நம்பிக்கை வீண்போகக்கூடாது.

திம்புவிலிருந்து நாடு திரும்பிய இலங்கை அதிகாரிகள் குழுத் தலைவர் திரு. எச். டபிள்யூ ஜெயவர்த்தன:

''சுயநிர்ணயத்துக்கான தமிழரின் உரிமையை அங்கீகரிப்பதன் மூலமும், இதனை ஒரு பூரண உரிமையாக்குவதன் மூலமுமே ஒரு அரசியல் தீர்வைக் காணலாம்என்ற தமிழ்க் குழுக்களின் பிரேரணை எந்த விதமாக அழைக்கப்பட்டாலும், அது ஒரு தனிநாட்டுக் கோரிக்கை என்ற முறையில் முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.''

இலங்கையின் இனப்பிரச்னை இப்பொழுதுதான் தோன்றியதொன்றல்ல இப்பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கென்று ஜனாதிபதி ஜெயவர்த்தன கூட்டிய சர்வகட்சி மாநாடு வட்ட மேசை மாநாடாக மாறி ஒரு வருடமாக இழுத்தடிக்கப்பட்டது.

பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவோம் என்றும் பயங்கரவாதத்தையும் பிரிவினைவாதத்தையும் கைவிட்ட பின்னரே அவர்களுடன் பேச்சுவார்த்தை என்றுமார்தட்டியவர்கள் திம்புவில் அவர்களைச் சந்தித்துப் பேசச் சம்மதித்தனர். சட்ட மேதைகள் பலரைக் கொண்ட ஒரு குழுவையும் அனுப்பி வைத்தனர்.

இந்தச்சட்டமேதைகளுக்கும் சரி இனப்பிரச்னைக்குத் தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை உணர்ந்து புதுடில்லியில் ''அனுபவம் குறைந்த இளைஞர்'' ராஜீவ் காந்தியைச் சந்தித்து இலங்கைத் தமிழருக்குச் சுயநிர்ணய உரிமை வழங்குவதாக வாக்களித்த ஜனாதிபதிக்கும் சரி திம்பு மாநாட்டில் ஆக்கபூர்வமான ஒரு திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியவில்லையே!

எந்தவொரு திட்டமும் இல்லாமல் இனியும் மாநாட்டை ஒத்திவைத்து இழுத்தடிக்கலாமென்றுதான் அரசு கருதுகிறதா? பேச்சுவார்த்தையை இழுத்தடித்துக்கொண்டு ''பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்ட'' ஆயுத பலத்தைப் பெருக்குவது அரசின் திட்டமா?

இன்னமும் மாவட்ட சபை, மாகாண சபைகள் மூலம்தான் இலங்கை இனப் பிரச்னைக்குத் தீர்வுகாண முடியுமென அரசு கருதுவதாயின் இதைப்பற்றி எடுத்துச்சொல்வதற்குத் திம்புவிற்குப் போகத் தேவையில்லை.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தமிழர்களுக்குச் சுயாட்சிவழங்கும் திட்டம் வைத்துள்ளார் என்றுகூறப்படுகிறது சுயாட்சி உரிமை வழங்குவதாக புதுடில்லியில் சந்தித்தபொழுது ஜனாதிபதிஜெயவர்த்தனகூறியதாக இந்தியப்பிரதமர்ராஜீவும் சமீபத்தில் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் சுயாட்சித் திட்டத்தை திம்பு மாநாட்டில் சமர்ப்பித்திருக்கலாம். மாவட்ட சபை, மாகாண சபை என்று காலத்தைக் கடத்துவதால் யாருக்கு என்ன லாபம்?

### மாநில சுயாட்சி

தமிழ் மக்களுக்கு மாநில சுயாட்சி வழங்கவேண்டுமென்பதை கம்யூனிஸ்ட் கட்சிகள், சமசமாஜக் கட்சிகள், ஸ்ரீ லங்கா மக்கள்கட்சி ஆகியவை ஏற்றுக்கொண்டுள்ளன. மாநில சுயாட்சி மூலமே இனப் பிரச்னைக்குத் தீர்வுகாணமுடியுமென்பதை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி வட்டமேசை மாநாட்டில் திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது திட்டம் என்னவென்பதை வெளியிடவில்லை ஆட்சி அதிகாரப்போட்டி காரணமாக எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் சுதந்திரக் கட்சி எதிர்க்கும் என்பது அதன் போக்கிலிருந்து தெளிவாகிறது.

இனப்பிரச்னைக்கு சுமுகமான நிரந்தரமானதொரு தீர்வை விரைவாகக் காணவேண்டும் என்பதைச் சிங்களப் பொது மக்கள் விரும்புகிறார்கள்.

அரசியல் ஆதிக்கப் போட்டிதான் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதில் இடையூறாக உள்ளது.

இந்தியாவிலுள்ளதுபோன்ற சுயாட்சி அமைப்பைவிட அதிகமாக எதையும் இலங்கைத் தமிழர் எதிர்பார்க்க முடியாது என்று இந்தியப் பிரதமர் கூறியதாக இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரிகைகள் பெரிதாகச் செய்திகள்வெளியிட்டிருந்தன.

தனிநாட்டுக் கோரிக்கையை இந்தியப் பிரதமர் ஆதரிக்க மாட்டாரென்பது அரசியலில் அரிச்சுவடி படிப்பவனுக்கே நன்கு தெரியும்?

### இதுவரை பெரும் சாதனை

பூட்டான் மாநாடு எதைச் சாதித்தாலும் சாதிக்காவிட்டாலும் இதுவரை ஒரு சாதனையை நிலைநாட்டியிருக்கிறது.

தீவிரவாத இளைஞர் குழுக்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் முழு ஒத்துழைப்புடன் ஒரே மனத்துடன்செயல்பட்டது பெரும் சாதனையாகும். ஆறு தீவிரவாதக் குழுக்களும் கூட்டணியும் ஒரே அமைப்பாகச் செயல்பட்டிருப்பதும் தீவிரவாதக் குழுக்களைச் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கை அரசு ஒப்புக்கொண்டதும் அதை ஒப்புக்கொள்ள இந்தியா எடுத்த நடவடிக்கையும் தீவிரவாதக் குழுக்களை இலங்கை, இந்திய அரசுகள் அங்கீகரித்துள்ளதற்குச் சமமாகும். இதுவும் ஒரு பெரும் சாதனையே!

★ எஸ். எம். ஜி. ★

# வவனியா மாவட்டத்தில் பாசனகுளங்களின் அவலநிலை

வவனியா மாவட்டத்தில் ஏறக்குறைய 563 சிறிய நீர்ப்பாசன குளங்களும் 19 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் உள்ளன. 847 சதுர மைல் பரப்பளவைக்கொண்ட இம் மாவட்டத்தில் ஏறக்குறைய 682 சிறிய பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் நம் முன்னோர்களினால் அமைக்கப்பட்டுள்ளன இதைத் தவிர 100 குளங்களுக்கு மேலாக இதுவரை புனருத்தாரணம் செய்யப்படாமல் அழிகுளங்களாகவே இருக்கின்றன கிட்டத்தட்ட ஒரு சதுரமைலுக்கு ஒரு குளம் வீதம் இம் மாவட்டத்தில் அமைந்திருப்பதைக் காணலாம். இது நம் முன்னோர்கள் விவசாயத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைக் காட்டுகின்றது குளமென்றால் கிராமம்என்ற உணர்வும் கருத்தும் தான் இம் மாவட்ட விவசாயிகளிடையே நிலவுகின்றது.

இந்தச் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நல்லநிலையில் வைத்து இயங்கச்செய்வதற்கு வருடாந்த பராமரிப்பு வேலைகள் மிகவும் முக்கியமானது. முன்பு இந்த நீர்ப்பாசனத் திட்டங்களை பராமரித்து நல்ல முறையில் வைத்திருப்பதற்கு சிறந்த திட்டங்களையும், விதிகளையும் தயாரித்து நடைமுறைப்படுத்தியிருந்தார்கள். தற்போது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நீர்ப்பாசன இலாகாவும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை கமத்தொழில் சேவைத் திணைக்களமும் வருடாந்த பராமரிப்பு வேலைகளுக்கு பொறுப்பாக இருக்கின்றன. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் வருடாந்த பராமரிப்பு வேலைகள் ஒழுங்காகவும், திருப்திகரமாகவும் நடைபெறும் அதே வேளையில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் பராமரிப்பு வேலைகள் சில ஆண்டுகாலமாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன, பெரும்பாலான சிறு குளங்களின் வருடாந்த பராமரிப்பு வேலைகள் கவனிக்கப்படாமல் அழிந்தநிலையிலும், உடைப்பெடுக்கும் அபாயகரமான நிலையிலும் இருப்பதைக் காணலாம். குளக் கட்டுக்கள் உருமாறியும் மண் அரிப்புக்களும், உடைப்புகளும் நிரப்பப்படாமலும், காடு வளர்ந்தும், கலிங்குகள் உடைந்து அவைகளுக்கு மேல் காடு வளர்ந்திருப்பதையும் நாம் பெரும்பாலான குளங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நிலை இன்னும் சில ஆண்டுகள் தொடருமானால் சிறு குளங்கள் உடைப்பெடுத்து அழிவு ஏற்படும்நிலை வெகுதூரத்தில் இல்லை. இதைத்தவிர வாய்க்கால்களும் வருடாந்த பராமரிப்பின்றி பக்கக் கட்டுக்கள் உடைப்பெடுத்து மணல் நிரம்பி காடுகள் மூடிக்கிடப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

இம் மாவட்ட விவசாயிகளில் பெரும்பாலானோர் இச் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் விவசாயம் செய்பவர்கள். இம் மாவட்டத்தில் நெற்சாகுபடிசெய்யும் 51,000 ஏக்கரில் 40,500 ஏக்கர் இச் சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் கீழ் நெற்செய்கைபண்ணப்படுகின்றன. இந்த வறிய விவசாயிகள் தான் இந்த மாவட்ட நெல் உற்பத்திக்கு முக்கிய பொறுப்பாளர்களாவார் எனவே இச் சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களின் திருத்த வேலைகளையும், வருடாந்த பராமரிப்பு வேலைகளையும் அலட்சியம்செய்வது இம் மாவட்ட ஏழை விவசாயிகளுக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். சிறிய நீர்ப்பாசனத்திட்டங்களின் திருத்த வேலைகளையும், வருடாந்த பராமரிப்பு வேலைகளையும் அலட்சியம் செய்வது இம் மாவட்ட ஏழை விவசாயிகளுக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும் சிறிய நீர்ப்பாசனக் குளங்கள் அழிந்த நிலையில் இருப்பதற்குக் காரணம் நிதி பற்றாக்குறைதான் என்று கூறமுடியாது. 1979ம் ஆண்டிலிருந்து விவசாய அமைச்சு போதிய நிதியை சிறிய நீர்ப்பாசன பராமரிப்புக்கென்று ஒதுக்கியிருந்தது. இதனை முழுமையாக பயன்படுத்தத் தவறியமை வவனியா கமத்தொழில் சேவைத் திணைக்களத்தின் அசமந்த போக்கும், அலட்சிய மனப்பான்மையுமாகும் ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் முடியுமுன்னர் பராமரிப்பு வேலைகளின் முன்னுரிமைப் பட்டியல் தயாரித்து தேவையான நிதிகோரி கமத்தொழில்சேவை ஆணையாளருக்கு விண்ணப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் வவனியா கமத்தொழிற்சேவைத் திணைக்களம் சித்திரை மாதத்தில் தான் 1979, 1980, 1981, 1982 அங்கீகரிக்க பட்டியல் அனுப்பியது. இந்தச் சுணக்கம் காரணமாக நாட்டிலுள்ள ஏனைய மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து எஞ்சியதிலிருந்துதான் வவனியா மாவட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச் சொற்ப நிதியைக்கூட முழுமையாகச் செலவு செய்யாது ஒரு பகுதி திருப்பி அனுப்பப்பட்டது. இன்னுமொரு விசித்திரமான விடயம் சிறிய நீர்ப்பாசன வருடாந்த பராமரிப்புக்கென ஒதுக்கப்பட்ட நிதி மின்சார விஸ்தரிப்புக்கெனச் செலவு செய்ததமையும், அதிக பலனளிக்காத தனிப்பட்டவர்களின் பாசன குளங்களைப் புனருத்தாரணம் செய்ததமையுமாகும் அழிந்த குளங்களைப் புனருத்தாரணத்திற்கென தெரிவு செய்தபோதும் கூட சரியான ஒழுங்கு முறை கடைப்பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மு. நடராசா

மேலும் 1984ம் ஆண்டிலிருந்து உலக அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் வவனியா மன்னார் மாவட்டங்களில் கிராமிய ஒருங்கிணைப்புத்திட்டங்கள் அமுல் செய்யப்படவிருக்கின்றன இந்த அபிவிருத்தித்திட்டங்களின் குறிக்கோள் கிராம மக்களின் வருமானத்தைக் கூட்டுவதும், அவர்களின் கல்வி, சமூக, பொருளாதார சேவைகளை அளிப்பதுமாகும், இக் கிராமிய ஒருங்கிணைப்புத் திட்டங்களை வவனியா, மன்னார் மாவட்டங்களில் நடைமுறைப் படுத்துவதற்கு 7174 இலட்சம் ரூபா செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது இத் திட்டங்களின் அபிவிருத்தி வேலைகள் யாவும் 1988ம் ஆண்டில் பூரணத்துவம் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன இக்கிராமிய அபிவிருத்தித் திட்டங்களின் பிரகாரம் வவனியா மாவட்டத்தில் பின்வரும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றன.

1. 225 ஏக்கரில் பழ மரங்கள் நடுதல்.

2 2250 ஏக்கரில் பயன் தரும் மரங்கள் நடுதல்,

3. 14 பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு அபிவிருத்தி வேலைகளும, நீர் முகாமைத்துவ வேலைகளும், இதற்கு மடுக்குளம்' சேமமடு, மகா இறம்பைக்குளம், மாமடு, மடுகந்தை, முகத்தான்குளம், ஈறப்பெரியகுளம், பெரிய தம்பனை.. வவனியா போன்ற 9 குளங்களும். இன்னும் தெரிவு செய்யப்படவிருக்கும் 5 பெரிய நீர்ப்பாசனக் குளங்களும் அடங்கும்,

4. மரக்கறிவகை சேமிப்பதற்கு குளிரூட்டப்பட்ட களஞ்சிய அறை அமைத்தல்,

5 முழு அளவிலான கமக்காரர் பயிற்சி நிலையமும், நில ஆராய்ச்சிப் பிரிவும் அமைத்தல்,

6 350 கிணறுகளை விவசாயத்திற்கென அமைத்து வழங்குதல்

7. 10 கிராமங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு வழங்குதல்,

8. கிராமிய தெருக்களும்' பாதைகளும் செப்பனிடுதல்.

(6-ம் பக்கம் பார்க்க)

## பகையெலாம் அழிக்கும் சண்டீ!

செந்திரு மடந்தை நீயே சேர்கலைச் செல்விநீயே
புந்தியில் ஒளிருஞ்சோதித் தெய்வமும் நீயேஅம்மா
எந்தனை அணைத்ததாயே கதிர்விடுஞ் சூலத்தாயே
சுந்தரக் கன்னாதிட்டி இலங்கிடும் காளித்தாயே

சரபரின் துணைவிநீயே சங்கரன் துணைவிநீயே
அரவது பாசமாக்கொள் அம்பிகை நாகதேவி
வரமது நல்குந்தாயே பகையெலாம் அழிக்குஞ்சண்டி
தரமுறு கன்னாதிட்டி இலங்கிடும் காளித்தாயே

நியூ புஷ்பா ஜுவல்லர்ஸ்,
284, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ கன்னாதிட்டி அருள்மிகு காளிகாதேவி
இன்று 2-ம் திருவிழா.

## நம்பினோரைக் காக்கும் தாய்!

பிரணவ ரூபியாகிப் பிஞ்ஞகன் தேவியாகி
அரனவன் ஆட்டங்காட்ட ஆடிடும் நடனதேவி
சரவண பவனைத்தந்த சங்கரி சாமுண்டிநீ
வரை நிறை கன்னாதிட்டி இலங்கிடும் காளித்தாயே

அம்பிகை அமரிநீலி ஆரணி அங்கைசூலி
தும்பிகா முகத்தன் தாயே தூயளே பத்திரகாளி
நம்பினோர் தம்மைக்காக்கும் நாயகி நாதரூபி
அம்பதி கன்னாதிட்டி இலங்கிடும் காளித்தாயே

நியூ சோதி ஜுவல்லர்ஸ்,
127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

★ கன்னாதிட்டி அருள்மிகு காளிகாதேவி
இன்று 2-ம் திருவிழா.

## சிவஞானசித்தியார் (சுபக்கம்)

### திருத்தப் பதிப்பு அவசியம்!

சைவசித்தாந்தத்தின் ஆதார நூல்கள் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு. இவற்றில் சிவஞான சித்தியார் (சுபக்கம்) அருணந்தி சிவாசாரியாரால் இயற்றப்பட்ட தனித்தன்மை வாய்ந்த நூல்.

மறைஞானதேசிகர், சிவாக்ர யோகியார், ஞானப்பிரகாசர், சிவஞானயோகியார், நிரம்ப வழகியர், சுப்பிரமணிய தேசிகர் என அறுவர் உரை கண்டனர்.

இந்நூல் கிடைத்தற்கு அரிதாயுள்ளது இதன் புதிய திருந்திய பதிப்பின் வெளியீடு இன்றைய பல்கலைக்கழக மெய்யியல், இந்து நாகரிக, கல்வித் துறைகளுக்கு அவசியம் வேண்டப்படுவதொன்றாகும். இந்நூலினை ஆராய்ச்சிப் பதிப்பாக வெளியிடுவதற்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று முன்வந்துள்ளது எனவே நூலினைப் பிரசுரிப்பதற்கு முன்வருவோரது ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்கு,

கலாநிதி
சோ. கிருஷ்ணராஜா,
மெய்யியற்றுறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(நா)

## வவனியா...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

9. கமநல சேவைகள் விஸ்தரித்தல், கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி நிறுவுவதற்கு முதலாம் கட்ட வேலைகளை ஆரம்பித்தல்,

10 50 பொதுக்கிணறுகள் அமைத்தல்,

11. 2 கமநலசேவை நிலையங்களும், 6 உரக் களஞ்சியங்களும் நிறுவுதல்,

12. விவசாயிகளுக்கு தெளிகருவிகளும், நீர் இறைக்கும் இயந்திரங்களும் வாங்குவதற்குக் கடன் உதவித்திட்டம் வகுத்தல்.

இத்திட்டங்களை அமுல் செய்ய தேவையான கட்டிடங்கள், கட்டிட தளபாடங்கள், கந்தோர் உபகரணங்கள், வாகனங்கள் முதலியன வழங்குதலும் இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த கிராமிய ஒருங்கிணைப்புத்திட்டத்தை அவதானிக்கும் போது வவனியா மாவட்ட விவசாயிகள் ஒரு பெரிய குறைபாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மன்னார் மாவட்டத்தில் 60 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை (மாவட்டிலுள்ள குளங்களில் அரைவாசிக் குளங்கள்) அபிவிருத்திசெய்ய ஒருங்கிணைப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும்போது வவனியா மாவட்டத்தில் 600 சிறிய குளங்களில் ஒரு பகுதியையேனும் இக்கிராமிய அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்காதது பெரும் ஏமாற்றத்தை இம்மாவட்ட ஏழை விவசாயிகளுக்கு அளிக்கின்றது.

வவனியா மாவட்டத்தில் வாழும் 1,10,000 மக்களில் 96% மானோர் வறிய விவசாயிகள். இந்த விவசாயிகளில் பெரும்பாலானோர் சிறிய நீர்ப்பாசனத்தின்கீழ் விவசாயம் செய்பவர்கள். இவர்களின் பொருளாதாரம் உயர்த்தப்பட வேண்டுமாயின் சிறிய நீர்ப்பாசனக்குளங்களை அபிவிருத்தி செய்து அவர்களுக்குத் தேவையான நீரை வழங்க நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும்.

# எமது மண்ணைப் பற்றி நாம் அறியவேண்டாமா?

சிற்பக்கலை என்பது குருகுலவாசத்தால் நீண்டநாள் அனுபவத்தில் அறிந்து உணர்ந்துகொள்ளவேண்டிய விஷயம். சிற்பக்கலையில் பற்பலக் கலைகள் அடங்கியுள்ளன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் ஆயகலைகள் அறுபத்தநான்கினுக்கும் தாயகமானது. நாம் வணங்கும் திருவுருவை நிர்மாணம்செய்து விட்டால் அது சிற்பம் ஆகிவிடாது. அது கல்லோ, செம்போ பஞ்சலோகமோ தங்கமோ வெள்ளியோ மரமோ எதுவாயிருந்தாலும் அதன் உருவ அமைப்பை மட்டும் சிற்பக்கலைஎன்று கூறிவிட முடியாது இதற்கு நிறைய சாஸ்திர அநுபவம் தேவை.

### நகர அமைப்பு

ஒரு கிராமமோ நகரமோ பட்டினமோ நிர்மாணிக்கப்படுவது சிற்ப சாஸ்திரத்தின் அடிப்படையில்தான் எந்தெந்த பூமியில் எங்கெங்கு எப்படி கிராம, நகரங்களை அமைப்பது என்பதைச் சிற்பச் சாஸ்திரம் தெளிவாகக் கூறுகின்றது. மண்ணின் சுவை, நிறம் முதலிய குணபேதங்களை அது விவரித்துக் கூறுகிறது. மக்களுக்குச் சுகாதாரம் முக்கியமானது என்பதை உணர்ந்து மண் வளத்தைப் பேசுகிறது.

### மண்களால் ஏற்படும் வியாதிகள்

சில மண்களின் துர்க்குணத்தால் யானைக்கால், சரும வியாதி, க்ஷயரோகம் முதலிய சர்ம வியாதிகள் ஏற்படுகின்றன. அதை உணர்ந்தே சிற்ப சாஸ்திரம் மண்ணின் இலக்கணங்களை விரிவாகப் பேசியுள்ளது. பூமியை சுபத்மா, பத்ரிகா, சம்பூர்ண, தாம்ரா என்று நால்வகைகளாகப் பிரிந்தது. அந்தந்த மண்ணின் தன்மையைஎடுத்தியம்புகிறது. இதை நன்குணர்ந்தே பல்லாண்டு காலத்திற்கு முன் சிற்ப சாஸ்திரம் அறிந்த சான்றோர்களால் அமைக்கப்பட்ட சில நாடு நகரங்கள் இன்றும் பொலிவுடன் விளங்குவதைக் காண்கிறோம்.

சிற்ப சாஸ்திர வடிவமைப்பில்கூறியுள்ளபடி, ஆலயத்தை முதன்மையாக வைத்துத் திருக்குளங்களை அமைத்துச் சுற்றிலும் மாடவீதியமைத்து நகரங்கள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதைக் கண்கூடாகக் காணலாம்.

சிற்ப சாஸ்திரத்தில் அதிமுக்கியமானது பூசாஸ்திரம். பூமியைச் சித்தபூமி, அசித்த பூமி என இரண்டுவிதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

### சித்த பூமி

மலையடிவாரங்களிலும், மலை நடுப்பாகத்திலும், மலைச் சிகரங்களிலும், நதியின் கரைகளிலும், நதியும் கடலும் ஒன்று சேரும் இடங்களிலும், கடற்கரைகளிலும், நதித் திட்டுகளி கடற்தீவுகளிலும், மணற்குன்றுளிலும், நல்ல ஜலமுடைய காடுகளிலும், கட்டப்பட்ட ஆலய நகர நாடுகளுக்கு சித்த பூமி என்று சொல்வார்கள். இவ்விதமாய்ச் சொல்லப்பட்ட சித்தபூமியின் விசேஷம் என்னவென்றால், மலையருவிகளின் சப்தமும் அலைகளின் ஓசையும் காதிற்கு இனிமையாகக் கேட்கும். இவ்வகை பூமியிகளில் வசிக்கும் மக்களுக்கு உடல் ஆரோக்கியம், தீர்க்காயுள், சௌக்கியம் உண்டாம். இது போன்ற பூமிகளில்தான் எல்லாவித சிறந்தபக்ஷி ஜாதி வகைகளும் அவைகளின் இனிய குரல் ஓசையும் அழகாக கேட்கும். இந்த குறிப்பிட்ட லக்ஷணங்கள் அற்ற மற்ற இடங்களை அசித்த பூமி என்பார்கள்.

இது ஆலயங்கள் அமைக்க ஏற்ற பூமியல்ல. சித்தபூமியை நான்கு விதமாகப் பிரித்துக் கூறுகின்றார்கள். அவையாவன: சுபத்மா: பதரகா, சம்பூர்ண, தாதமரா. அவைகளின் அடையாளத்தை இப்போது பார்ப்போம்:

**சுபத்மா**

மருதம்-வயலை சார்ந்த பூமி.

இந்த பூமிக்கு என்ன அடையாளம் என்றால், எந்தப் பூமியில் செண்பகம், அகில். கடம்பு, கதம்பமரம், வெட்டிச்செடி, பாக்குமரம், தென்னைமரம், நாணல், தர்ப்பம் இவைகள் முளைத்து ஓங்கி வளர்ந்திருக்கிறதோ, எதில் அதிகமாயும், ருசியாகவும் இருக்கிற ஜலமானது மேல் நீர் பாங்காகவும் இருக்கிறதோ, அப்படிப்பட்ட ஜலத்தில் ஏற்படும் குளத்தில் தாமரை, கருநெய்தல் முதமுதலியவை பரவிப் படர்த்தும் கண்களுக்கு அழகாகவும் இருக்கின்றனவோ அந்தப் பூமியை சுபத்மா என்று நாம் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

**பத்ரகா**

நெய்தல்- சமுத்திரக் கரையைச் சார்ந்த பூமி.

பத்ரகா என்ற பூமியானது நதி, கடல் இவைகளின் சமீபத்தில் உள்ள பூமியாகும். எந்த பூமியில் ஜலம், சீதளமாயும் ருசி மிக்கதாயும் இருக்கின்றதோ, எங்கு அநேக அபூர்வ விருக்ஷங்கள் ஓங்கி வளர்ந்தும், அதிருசியான பழங்களை உடையதாகவும், மற்றும் எங்கு அநேக விதமான புஷ்ப ஜாதிகள் நிரம்பிய தோட்டம், தோப்புகள் போன்று செடி, கொடிகள் இருக்கின்றனவோ, எங்கு மரங்கள் நாணல், தர்ப்பை, நெற்பயிர்கள் வளம் மிக்கதாய் இருக்கின்றதோ அந்தப் பூமிக்கு பத்ரகா என்று பெயர். இத்தனை விதமான அம்சங்கள் இருந்த போதிலும், அங்கே கீழ்நீர்ப் பாங்கு. அதாவது ஜலம் கீழே ஆழத்தில்தான் கிடைக்கும். இதைச் சில; கீழ்நீர்ப்பாங்கு பூமி என்றும் கூறுவர். பத்திரகா, சம்பூர்ண இரண்டும் மிக நல்ல பூமியேயாகும்-

**சம்பூர்ண**

குறிஞ்சி- மலை, மலைசார்ந்த பூமி.

இப்போது சம்பூர்ணவைப் பற்றி அடையாளம் சொல்லுகிறேன். எந்தப் பூமியில் கேழ்வரகு, வரகு, உளுந்து, கொள்ளு, தினை போன்ற புஞ்சை தானியங்கள் முளைத்துப் பயிராகின்றதோ, எந்தப் பூமியானது மலைகளின் அடிவாரத்திலாவது மலைகளின் நடுப்பாகத்திலாவது சிகரத்திலாவது இருக்கிறதோ, எங்கே அதிக ஜலம் இல்லாமல் கீழ் நீர் பாங்கும் கொஞ்சமாகக் கீழே நீரோட்டமும் இருக்கின்றதோ இவ்வித பூமியைச் சர்பூண என்று நாம் நிச்சயித்துக் கொள்ளலாம்.

**தூம்ரா**

எந்தப் பூமியில் முட்செடி, அடர்ந்த மூங்கில், புதர், சதுரக்கள்ளி போன்ற காட்டுப்பச்சிலைகள் முளைத்துக் காடு போன்ற சூழ்நிலையில் காக்கை. கோட்டான், கழுகு. குள்ளநரி முதலிய துஷ்ட பக்ஷிகள், மிருகங்கள் இருக்கின்றனவோ, மண் உழமண்ணவும் இருக்கின்றதோ அந்த பூமியை தூம்ரா என்பார்கள்.

ஸுபத்மா என்ற பூமியில் பிறக்கின்றவனுக்கும் அங்கு வசிக்கின்றவனுக்கும் நல்லதிட ஆரோக்கியத்தையும் சாந்தத்தையும் அமைதியையும் அளிக்கும். தெய்வ சிந்தனையையும் உண்டுபண்ணும். பத்ரகா பூமியிலே பிறக்கின்றவர்களுக்கும், வசிக்கின்றவர்களுக்கும் சுப சௌக்கியங்களும், கூரிய அறிவும், காளகவிதா சாதுர்யங்களும் உண்டாகும். இந்த இரண்டு பூமிகளும் மக்களுக்குச் சுபதை உண்டு பண்ணும் உத்தமபூமி என்று சிற்ப சாஸ்திரம் பேசுகிறது. சம்பூர்ண என்னும் பூமியில் பிறக்கின்ற, வசிக்கின்றவர்களுக்குத் தேக புஷ்டியையும் திடகாத்திரத்தையும் கொடுப்பதோடு சிறிது முன்கோபமும், பிறகு சிந்திக்கின்ற புத்தியையும் கொடுக்கும்.

மேற்சொன்ன 3 பூமியையும் 1 அடி சதுரம் 1 அடி ஆழம் தோண்டி, மண்ணை வெளியில் எடுத்து பிறகு அதை நிரப்பும்போது மண் மிகுதியானால் உத்தமபூமியாகவும், மண் சமமானால் மத்திம பூமியாகவும், அந்த மண் பள்ளத்திற்கு குறைவானால் அந்த பூமியில் வியாதிகள் உண்டாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்படி முறையே அந்தந்த பூமிகளை வரையறுத்துக் கண்டுபிடித்து நாடு, நகரங்களாக, கோயில்களாக நிர்மாணித்து இருக்கிறார்கள். மேலும் அந்த பூமியை நன்கு ஆழமாக உழுது நஞ்சை புஞ்சை நவதானியங்களைத் தெளித்து அந்த தானியங்கள் 3 தினங்களுக்குள் முளை எழுமானால் உத்தமமாகவும், 5 முதல் 7 தினங்களுக்குள் முளை எழுமானால் மத்திம பூமியாகவும். முளை விட 10 தினங்களுக்குமேல் ஆனால் அல்லது காய்ந்துவிட்டால்அந்தபூமியை தள்ளிவிடவேண்டும் என்றும் சிற்ப சாஸ்திரம் நினைவுபடுத்துகிறது. முல்லை மலரைப் பறித்து அந்தப் பூமியில் தெளித்தால் அந்த மலர் வதங்காமல் பூத்து மலர்ந்திருக்கின்ற இடத்தை குறித்துவைத்து, அந்த இடத்தில் கிணறு முதலியவைகள் தோண்டினால் நல்ல நீர் கிடைக்கும். அந்த நீரும் மேல் நீர்ப்பாங்காக இருக்கும் என்பதை அறிந்துகொள்ளலாம்.

இதைப்போல் கீழ்நீர்ப் பாங்கும் நல்ல ஜலமும் இருக்கின்ற இடத்தில் எறும்புப் புற்று, பாம்புப்புற்று, கறையான்புற்று இருக்கின்ற இடத்தைக் கண்டுபிடித்து வட்டமாகவோ சதுரமாகவோ வரைந்து அங்கு துரவுகள், குளங்கள் குட்டைகள் ஏற்படுத்திக்கொள்ளலாம். அங்கு குடிப்பதற்கு ருசியும் குளிர்ச்சியுமாயுள்ள நல்ல தண்ணீர் கிடைக்கும் என்று சிற்ப சாஸ்திர நூல்வல்லோர்கள் உணர்தியுள்ளனர்.

பாறைகள் நிறைந்த இடத்தில் மலையில் இருந்துவரும் அருவி நீர்களைத் தேக்கி மக்களுக்கு உபயோகப்படுத்துகின்றார்கள். இப்படிப்பட்ட இடங்களைக் கண்டுபிடித்து ஆலயங்களை, நாடு நகரங்களை, கிராமங்களை ஆன்றோர்கள் அமைத்துள்ளனர். இந்த இடங்களில் ஜனங்கள் ஆரோக்கியம் மிகுந்தவர்களாக நல்ல சுபாவ குணம்படைத்து ஒற்றுமையாக வாழ்வார்கள். இந்த நகரங்களை அமைக்கும்போது அந்த நகரத்தின் தலைக்கால் தெரிந்து அமைக்கவேண்டும் வடதிசை காட்டும் (சம்ஸா) திசைகாட்டும் கருவியைக்கொண்டு எட்டு திசையையும் சரியானபடி அளந்து சதுரப்படுத்தி அந்த ஊர் மத்தியில் கோயில் அமைத்து அதைச் சுற்றிலும் வீதிகளை அமைத்து வீடுகள், மாளிகைகள் கட்டிக்கொள்ள வேண்டும். அந்த பூமி எந்தப் பக்கம் உயர்ந்து எந்த பக்கம் தாழ்ந்து இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள வேண்டும். கிழக்குப் பக்கமும், தெற்குப் பக்கமும் சாய்ந்திருப்பது உத்தமம் என சிற்ப சாஸ்திரம் கூறுகிறது பொதுவாக மேட்டு பூமியைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பள்ளத்தாக்குகளில் நல்ல இடமாககிடைத்தாலும் அங்கு நாடு நகரங்களை அமைக்கக் கூடாது. சமீபத்தில் மலையருவி இடத்திலோ, நதி பெருக்கெடுக்கும் இடத்திலோ, அடைமழை காலத்தில் நீர் தேங்கி வழியும் இடத்திலோ வீடுகள் கட்டினால் மக்களுக்கு துன்பம் நேரும் என்பதையும் சிற்ப சாஸ்திரம் எச்சரித்துள்ளது.

## 'நினைவில் ஒரு மலர்'

### மெய்கண்டான் அதிபர் நினைவுமலர்

மெய்கண்டான் அதிபர் சுழிபுரம் இரத்தினசபாபதி அவர்கள் நினைவாக அன்னாரது பணிகளைக் குறித்து மலரொன்று வண்ண மலராக அழகுற அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. 'மெய்கண்டான்' என்றதுமே கலண்டர்தான் முதலில் நினைவில் வரும்

சைவத்தையும், நம்பிக்கையினையும் மூலவளமாகவும். மூலதனமாகவும் போட்டு அச்சுக்கலையில் உயர்ந்தவர் இரதத்தினசபாபதி அவர்கள். பொருட்செல்வத்தை அருட்செல்வத்தின் பொருட்டும், அறிவுச் செல்வத்தின் பொருட்டும் வாரி இறைத்த வள்ளன்மையாளர் அவர். அவரது சிறப்புக்களையும், தூய்மையான தெய்வப் பணிகளையும், பொதுமக்கட் பணிகளையும் பலர் மலரிலே பாராட்டியுள்ளனர்.

'மெய்கண்டான்' என்ற சொல் 'உண்மையினைக் காணுதல்' என்ற பொருளில் வருவது. சுவேதவனப் பெருமாள் மெய்கண்டாரானார் என்பது அடியார் வரலாறு. ஆனால் திருக்குறள், திருவுருவம் ஆகியவற்றினூடாகத் தமிழ் மக்களது ஒவ்வொருவரது வீட்டிலும் 'மெஞ்ஞானம்' நிலைபெறும்படியாகத் தமது 'கலண்டர்' மூலம் அறிவும், அழகும் திகழ அரும் பணியாற்றியவர் இரத்தினசபாபதி அவர்கள்.

மலரினை அச்சிட்டவர்கள் இன்னும் ஒருபடி உயர்ந்த நோக்கத்துடன் செயல்பட்டிருந்தால் மறைந்த மெய்கண்டான் அதிபருக்குச் செய்த கைம்மாறின் தரம் கூடியிருக்கும். அறிஞர்கள் ஆசாரசீலத்துடன் சைவத்தைப் பேணுபவர்களை அணுகித் தரமான கட்டுரைகளினை அனைவர்க்கும் பயன்படும்படி பிரசுரமாக்கியிருக்கலாம். எதிர்காலத்தினரை மானுடப் போற்றுதல்களை மட்டும் கொண்டு அலையாது சிந்தனையும் உசாத்துணைப்பண்பும் கொண்ட தரம்மிக்க கட்டுரைகளினால் பயனடைவித்திருக்கலாம் 'தரம்மிக்க மலராக' உருவெடுத்திருக்கவேண்டுமானால் அதற்கும் உழைப்பு வேண்டுமல்லவா?

கனகசபாபதி
நாகேஸ்வரன்

முடிவில் மலரின் அட்டையில் இடம்பெற்றுள்ள அவரது உருவப்பொறிப்பு கலாநிதி என். எம் பெரேரா அவர்களதுசாயலைக்கொண்டு இலங்குகின்றது. இரத்தினசபாபதி அவர்களது ஆன்மாவின் உள்ளொளியும், உழைப்பின் திண்மையும், ஆழமான பக்தியும் கொண்ட உணர்வின் வெளிப்பாடே என். எம். பெரேராவோ என்று எண்ணத்தோன்றிற்று. வர்த்தகத்திலும் சைவ நீதியைப் பின்பற்றியவர் அமரர் இரத்தினசபாபதி

அன்னாரது ஆன்மா சாந்தியடைவதாக!

## கிராம சேவையாளருக்கு அடையாள அட்டைகள்

(கித்தன்கேணி)

கிராமசேவை அலுவலகங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளது.

கிராமசேவை அலுவலர்களுக்கு புதிதாக அடையாள அட்டைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான சகல வேலைகளும் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

## வவனியாவில் உர வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

[வவனியா]

வவனியா மாவட்டத்தில் உர வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது திட்ட அமுலாக்கல் அமைச்சின் அனுசரணையுடன் உரச்செயலகம் இதற்கான ஏற்பாடுகளை கவனித்து வருகிறது.

செப்டம்பர் 23 முதல் 29-ந் திகதி வரையிலான காலப் பகுதி வவனியாவில் உர வாரம் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கூட்டமொன்று வவனியா கச்சேரி செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு கே லோகேஸ்வரன் தலைமையில் கடந்த வாரம் நடைபெற்றது.

இங்கு இவ்வாரத்தினை முன்னிட்டு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் மட்ட சமநலசேவை இலாகா பிரிவுகளிலும் கருத்தரங்குகள் இடம்பெறும்.

அத்துடன் விவசாயிகளுக்கான செய்முறை விளக்கங்களும், வங்கியில் கடன் பெற்ற விவசாயிகளுக்கான விசேட கருத்தரங்கு ஒன்றும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## புதிய உதவி அரசாங்க அதிபர்

[வவனியா]

வவனியா — நெடுங்கேணி பதில் உதவி அரசாங்க அதிபராக திரு. எஸ். பத்மநாதன் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் வவனியா கச்சேரி திட்டமிடல் பிரிவில் பிரதம லிகிதராக பணியாற்றியவர் ஆவார்.

## உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடாத கல்வி முழுமை பெறாது!

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி, மேற்படி கல்லூரியின் அதிபர் திரு. ச. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் சபாபதி இல்லம் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலாவதுஇடத்தைத்தட்டிக்கொண்டது

இவ்விளையாட்டுப் போட்டிக்கு, இக்கல்லூரியின் முன்னாள் ஆங்கில ஆசிரியர் திரு. சா. கணேசரத்தினம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வெற்றிபெற்ற வீரர்களுக்கு பரிசில்களை வழங்கினார்.

பிரதம அதிதி தமது உரையில்,

''பாடசாலை மாணவர்களின் வாழ்க்கையில் உடற்பயிற்சி மிகவும் இன்றியமையாதது அறிவுப் பயிற்சியும் உடற்பயிற்சியும் ஒரு மாணவனுக்கு உடலும் உயிரும் போன்றவை என்றால் மிகையாகாது. உடற்பயிற்சிக்கு ஊக்கம் கொடுக்கவும் அதனைக்குறிக்கப்பட்ட விதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் அமைய நடத்துவதற்கும்தான் விளையாட்டுப் போட்டிகள் எழுந்தன. உடற்பயிற்சிக்கு முக்கியத்துவம்கொடாத எந்தக் கல்வித்திட்டமும் பூரணத்துவம் அடையாது. உடற்பயிற்சிமூலந்தான் மாணவன் தனது தேகசுகத்தை மாத்திரமன்றி மனோசுகத்தையும்பெறுகிறான்.

''உடற்பயிற்சியின்றி தன் மனத்தை சதா படிப்பில் செலுத்துவானாகில் மந்தபுத்தியும் நோயும் பீடிக்கப்பட்டவனாவான்.

''விளையாட்டுப் போட்டிகளின் மூலம், தேகபலம் சுகம் பெறுவது மாத்திரமின்றி நல்லொழுக்கம், மனக்கட்டுப்பாடு, மனோசக்தியை வளர்த்தல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை சந்தோஷமாக, சமமாக ஏற்றுக்கொள்ளுதல் போன்ற நற்பண்புகளையும் மாணவர்கள் கற்றுக்கொள்ளலாம் எல்லாவற்றிற்கும் மேலாக விளையாட்டுப் போட்டிகள் மாணவர்களுடைய வருங்கால வாழ்க்கைக்கு ஓர் அரும்பெரும் பயிற்சியாகவும் அஸ்திவாரமாகவும் அமைகின்றன'' எனக் கூறினார். (வி)

## வவனியாவில் உணவு போஷாக்கு திட்டங்கள்

(வவனியா)

திட்ட அமுலாக்கல் அமைச்சின் உணவு போஷாக்கு பிரிவு இவ்வாண்டு வவனியா மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் செய்யத் திட்டமிட்டுள்ளது

இதற்கென 89 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது உலகவங்கி நிதியின் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நிகழ்ச்சி திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நடமாடும் சிருச்சை நிலையங்கள், தாய்மாருக்கான போஷாக்கு கல்வி, பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கான போஷாக்கு கல்வி, கிராமிய மட்ட தொண்டர் ஸ்தாபனங்களுக்கான நாடகப் போட்டி என்பனவாகும்.

## பனையிலிருந்து விழுந்து சீவல் தொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

சீவல் தொழிலாளியான இளைஞர் ஒருவர் பனையில் ஏறும்போது சறுக்கிவிழுந்து மரணமானார்.

புலோலி தெற்கைச் சேர்ந்த கணபதி செல்வராசாவின் (26 வயது) மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மரணவிசாரணை நடத்தினார்.

விசாரணையின்பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## பதவி ஏற்றார்

(வவனியா)

வவனியா நகரசபையின் புதிய பதில் செயலாளராக திரு. ஜே செல்வரட்ணம் பதவிஏற்றுள்ளார்.

இவர் இந்த நகரசபை அலுவலகத்தின் பிரதம லிகிதராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தனிச் சிங்களத்தில் கடிதங்கள்

(வவனியா)

வவனியா கச்சேரி திட்டமிடல் பகுதிக்கு அமைச்சுக்களிடமிருந்து வரும் கடிதங்கள், சுற்றறிக்கைகள் யாவும் சிங்களத்திலேயே வருவதாக தெரியவருகின்றது.

அநேகமாக இங்குள்ள அலுவலகங்கள் அனைத்துக்கும் உயர்மட்டத்தில்இருந்து வரும் கடிதங்கள், மற்றும் சுற்றறிக்கைகள் எல்லாம் சிங்களத்திலேயே வருகின்றதாம்.

## வவனியாவில் வான் கடத்தல்

(வவனியா)

வவனியா நகர் வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமான வான் ஒன்று கடந்த இரு வாரத்திற்கு முன் வவனியா-புளியங்குளத்தில் வைத்து இனந்தெரியாத சிலரினால் கடத்தப்பட்டது. குறித்த வான் கடத்தப்பட்டபோது அதில் சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கொள்வனவுப் பொருள்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

நெடுங்கேணி சென்றுவிட்டு திரும்பிவரும்போதே இவ்வான் கடத்தப்பட்டது.

## வான் கண்டுபிடிக்கப்பட்டது

[வவனியா]

வவனியா — மூன்றுமுறிப்பு என்ற இடத்தில் வைத்து ஆயுதம் தாங்கிய மூன்று இளைஞர்களினால் கடத்தப்பட்ட சோடா கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான வான அனாதரவான நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

## முத்துமாரி மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மேற்கு அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 30-ம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை தீர்த்தமும் அடுத்த நாள் பூங்காவனமும் நடைபெறும்.

ஆலயத்தின் இராசகோபுர வேலைகள் துரிதமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## திருமலை..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிபர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அண்மையில் வேப்பங்குளம் என்றஇடத்தில் திருமலை-பருத்தித்துறை பஸ் தாக்கப்பட்ட சமயம் பன்குளம் தபால் அதிபர் திரு. தர்மபாலன் இறந்தார் அதைத்தொடர்ந்து மூடப்பட்ட பன்குளம் தபால் நிலையத்தைத் திறக்க இப்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மகாநாட்டில் அறிவிக்கப்பட்டது

ஜூனில் இடம்பெற்ற வன்செயல்களில் சேதமடைந்த மூதூர், சேருவில பகுதிகளில் உள்ள தபால் நிலையங்களை இயங்கவைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது

## மாணவர்களின் ஆளுமையை வளர்ப்பது விழாக்கள், போட்டிகளே

(உடுவில்)

''விழாக்கள், போட்டிகளில் ஒழுங்கு, கட்டுப்பாட்டு முறைகளை கடைப்பிடித்து பங்கு பற்றுவதன் மூலம் வாழ்க்கையில் தலைமைதாங்கும் தகுதியைப் பெற விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கட்டாயம் பங்குபெற வேண்டும்'' என்று மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி திரு கா. சந்திரராசா கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நிர்வாக அதிகாரி திரு. கா. சந்திரராசா பரிசில்களை வழங்கி உரையாற்றினார்.

விளையாட்டுப் போட்டிகளில் 357 புள்ளிகளை ஸ்கொட் இல்லம் பெற்று முதலாமிடத்தைப் பெற்றது. 2-ம், 3-ம் இடங்களை முறையே பினெல், பேஜ் இல்லங்கள் பெற்றுக்கொண்டன.

## பாடசாலை முன்னேற்றத்திற்கு "ஆசிரியர் பெற்றோர் மாணவர்களின் பங்கு அவசியமாகும்''

(யாழ்ப்பாணம்)

''ஒரு பாடசாலை கல்வித்தரத்திலும் ஏனைய அம்சங்களிலும் சிறந்து விளங்க வேண்டுமாயின் அப்பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள். பாடசாலையில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகிய முத்திறத்தினரும் கூட்டாக இயங்கி ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் பாடசாலை அபிவிருத்தியடையும்''.

இவ்வாறு யாழ். இந்து பிரதமபாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய அதிபர் மு. திருஞானசம்பந்தபிள்ளை தெரிவித்தார்.

''அவர் தொடர்ந்து பேசுகையில்;

''யாழ். இந்து பிரதமபாடசாலை இன்று முதல் முதல்தரமான ஆரம்பபாடசாலையாக விளங்குவதற்கு இப்பாட ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களின் கட்டுக்கோப்பான ஒத்துழைப்பே காரணமாகும். கடமை கண்ணியம் கட்டுப்பாடு என்ற மூன்று 'விழுமியங்களும் பாலர்களிடம் நன்கு பதியத்தக்கதாக வழிகாட்டப்பட வேண்டியது அவசியம்'' என்றார்.

இக்கூட்டத்தில் நல்லூர் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சு. சிவநாயகமூர்த்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கப் புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

## விளையாட்டுப் போட்டி

(வவனியா)

வவனியா தமிழ் கல்வி வட்டார பாடசாலைக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் கடந்த சனியாழன் வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

தமிழ் வட்டார கல்வி அதிகாரி திரு. கே. நாகராஜா இது தொடர்பான ஏற்பாடுகளை கவனித்தார்.

## "விளையாட்டுப் போட்டி இளம் சந்ததியினரை சாதனைவீரர்களாக்குகிறது'' - கல்வி அதிகாரி

(பண்டத்தரிப்பு)

''எமது இளம் சந்ததி உடல் நலமிக்கவர்களாகி விளங்குவதற்கு விளையாட்டுகளிலும், உடற்பயிற்சிகளிலும் ஈடுபட வேண்டியது அவசியமானதாகும். மாணவர்களிடையே இலைமறைகாய்போல இருக்கும் திறமைகளையும், ஆற்றல்களையும் வெளிக்கொண்டுவந்து அவர்களை சாதனை வீரர்களாக உருவாக்குவதற்குஇதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் சிறந்த சாதனமாக அமைகின்றது''.

இவ்வாறு வட்டுக்கோட்டை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிக்கு தலைமை வகித்து பேசிய வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு ப சண்முகராசா குறிப்பிட்டார்.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் திரு சண்முகராஜா தொடர்ந்து உரையாற்றுகையில் 'மாணவர்கள் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் சிறுவயதிலிருந்து கடைப்பிடித்து ஒழுகுவதற்கு விளையாட்டுப்போட்டிகள் சிறந்த பயிற்சி களங்களாக அமைகின்றன.

வெற்றி தோல்விகளை சமமாக மதித்து நடக்கும் நற்பண்புகளையும் இதிலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்' என்றார்.

எமது புதிய தமிழ் வெளியீடு:-

பிரபு, ஊர்வசி நடித்த

"அடுத்தாத்து அல்பட்"

ஆங்கில வெளியீடுகள்:-

1-ST BLOOD புகழ் கதாநாயகன் நடித்த

1. NIGHT HAWK
2. INSIDE OUT (war)
3. DANGEROUS TRAFIC (Smugling Story)

வீடியோ பிரசாத்,

49, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

# "கூட்டுறவு இயக்கத்தை சீர்குலையாது பாதுகாக்க வேண்டும்"

## அரச அதிபர் பேச்சு

(மாவிட்டபுரம்)

"கூட்டுறவு இயக்கம் யாழ்ப்பாண மக்களுக்கு புதிதல்ல. எமது முன்னோர்கள் இவ்வியக்கத்தை மிக சிறப்பாக நடத்தி முன்மாதிரியாக திகழ்ந்தார்கள். ஆகவே கூட்டுறவு இயக்கத்தில் சீர்குலைவுகள் ஏற்படாது அவற்றை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்"

இவ்வாறு கூட்டுறவாளர் தினத்தைமுன்னிட்டு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய கூட்டுறவாளர்தின கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துரையாற்றிய யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் கூறினார்

சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ் சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் கூட்டுறவு இலாகா, மக்கள் வங்கி, பெற்றோலியம் கூட்டுத்தாபனம், திட்டமிடல் பகுதி, ஆகியவற்றின் உயரதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் ஏனைய ப நோ. கூ சங்கங்களின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. கா. இராமநாதன் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்துவைக்கப்பட்ட இக் கருத்தரங்கில் யாழ் அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னர் தனியிடம் இருந்துவந்தது உணவுப்பங்கீடு மட்டுமன்றி மக்களுக்கு அத்தியாவசியமான பல்வேறு துறைகளில் அன்று கூட்டுறவுச் சங்கங்கள் ஈடுபட்டு பெரிதும் உழைத்து வந்தன. யாழ் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழிகாட்டிகளாக இருந்து வந்தன. அவ்வாறான நிலைமையை மீண்டும் ஏற்படுத்த நாம் முன்வரவேண்டும்.

இக்கட்டான சூழ்நிலைகளில் மக்களுக்கு பல்வேறு விதமான உதவிகளை கூட்டுறவுச் சங்கங்கள் செய்கின்றன. நெருக்கடி நேரங்களில் கூட்டுறவுச் சங்கங்களையே நம்பியிருக்க வேண்டியநிலையில் நாம் இருக்கின்றோம். ஆகவே கூட்டுறவுச் சங்கங்களை நாம் பெரிதும் பேண வளர்க்கவேண்டும்

முன்னாள் மானிப்பாய் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் இக் கருத்தரங்கில் பேசுகையில்:

யாழ்ப்பாண மாவட்டத்தில் 50-ம், 60-ம் ஆண்டுகளில் கூட்டுறவுஇயக்கம் வெகு சிறப்பாக இயங்கி வந்தது. வெளிநாடுகளிலிருந்து கூட்டுறவு இயக்கம் பற்றி ஆராய இலங்கைக்குவந்தவர்கள் யாழ் மாவட்டத்திற்கே அனுப்பப்படும் நிலைஇருந்துவந்தது ஆனால்பின்னர் இவ்வியக்கத்தின் வளர்ச்சி தடைப்பட்டது

அரசாங்கத்தின் தலையீடு இருக்குமானால் கூட்டுறவு இயக்கம் ஒருபோதும் வளர்ச்சியற முடியாது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் கூட்டுறவு இயக்கம் நடத்தப்படும் போது தான் அதில் மக்கள்பங்கு ஏற்பட்டு வளர்ச்சியும் அடையமுடியும். இன்று கூட்டுறவ இவ்வாறான நடைமுறையின்கீழ் ஓரளவு வளர்ந்துவருகிறது என்றார்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு கா. இராமநாதன். மக்கள்வங்கி உதவி பொது முகாமையாளர் திரு எஸ் பி ஆனந்தன், யாழ் உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பற்குணம், யாழ். சிரேட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. க சண்முகலிங்கம் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு வி எம் சுவாமிநாதன், வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு இராஜரத்தினம் உட்பட பலர் இக் கருத்தரங்கில் உரையாற்றினர்.

# 24, 25, 26-ம் திகதிகளில் ஹர்த்தால்

## பாடசாலைகளில் பரீட்சை நடத்த முடியாத நிலை!

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பகுதிகளில் இம் மாதம 24 25, 26-ந் திகதிகள் ஹர்த்தால் என்று அறிவிக்கப்பட்டிருப்பதால் பாடசாலைகளில் தவணைப் பரீட்சைகளை நடத்துவது பற்றிய பிரச்னை எழுந்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் கல்லூரிகளில் க. பொ த, (உயர்தரம்) பரீட்சை ஆரம்பிக்கப்படவிருப்பதால், அதற்குப் பின் இந்த 3 நாட்களுக்குரிய பரீட்சைகளை நடத்துவது சாத்தியமில்லை எனக் கூறப்படுகிறது

கல்லூரிகள் ஆகஸ்ட் 2-ந் திகதி விடுமுறை விடுகிறது. ஹர்த்தால் நடைபெறும் தினங்களான 24, 25, 26-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் பரீட்சைகளை 27-ந் திகதி சனிக்கிழமையும், 28-ந் திகதி ஞாற்றுக்கிழமையும், 31-ந் திகதி போயா விடுமுறை தினத்திலும் நடத்துவது பற்றி ஆலோசிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

இதுபற்றி இன்று இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கல்விப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன

ஹர்த்தால் தினத்தன்று போக்குவரத்து முற்றாகஸ் தம்பிப்பதாலும், மாணவர்கள் பாடசாலைக்கு வரமுடியாத நிலையிலிருப்பதாலும் பரீட்சைகளை நடத்துவது சாத்தியமில்லை என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

# "முதலுதவிப் பயிற்சியின் அவசியம் உணரப்பட்டுள்ளது"

(பண்டத்தரிப்பு)

"வடமராட்சிப் பகுதியில் மிகவும் குறுகிய காலத்தில் இளைஞர்களும் யுவதிகளுமாக சுமார் இரண்டாயிரம்பேர் எமது படையின் முதலுதவிப் பயிற்சியைப் பெற்று அதற்கான சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்கள் இப்பகுதியில் முதலுதவி பயிற்சியின் அவசிய தேவையை உணர்ந்து இவர்கள் பயிற்சி பெற முன்வந்தமையினால்தான் பல்வேறு கிரமங்களுக்கு மத்தியிலும் அனைவரது ஒத்துழைப்போடும் இப்பயிற்சிகளை எம்மால் வழங்க முடிந்தது"

இவ்வாறு பருத்தித்துறை வேலாயுதபிள்ளை மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற சென். ஜோன் அம்புலன்ஸ் படையின் உத்தியோகத்தர்களுக்கு நியமனப் பத்திரங்கள் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கொண்டு உரையாற்றுகையில படையின் யாழ். மாவட்ட ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி குறிப்பிட்டார்.

கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு கே சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில்; 'முதலுதவிப் பயிற்சி சம்பந்தமான நூல்களும் கைபேடுகளும் தமிழ் மொழியில் இல்லாத குறையை நீக்குமுகமாக மந்திகை ஆஸ்பத்திரியை சேர்ந்த வைத்திய கலாநிதி எஸ் சுகுமார் தமிழ் மொழியில் முதலுதவிபற்றிய நூல் ஒன்றை எழுதியுள்ளார் நெல்லியடி-கட்டைவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினர் இந்த நூலை தமது செலவில் இலவசமாக அச்சிட்டுத்தர முன்வந்துள்ளனர் இதற்காக இவர்களுக்கு நன்றியுபாராட்டும் தெரிவிப்பது எமது கடமையாகும்.

"ஆளியவளை, நாகர்கோவில், குடத்தனை, வதிரி ஆகிய கிராம மக்கள் தங்கள் பகுதியில் போக்குவரத்து வசதிகள் இல்லாமல் இருப்பதால் முதலுதவிச் சிகிச்சை நிலையம் ஒன்றை அப்பகுதியில் நிறுவித்தரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்கள் என்றும், இந்த நிலையத்தை ஆரம்பித்து தொடர்ந்து நடாத்துவதற்கு அதிக பணம் தேவைப்படுவதாகவும் றெட்பானா போன்ற சமூகசேவை நிறுவனங்கள் நிதி உதவி அளிக்க முன்வரும் பட்சத்தில் இந்த முதலுதவிச் சிகிச்சை நிலையத்தை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்குமென்றும்" தெரிவித்தார்.

# தமிழ்த் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணார்பண்ணை இளையதம்பி தமிழ் வித்தியாலய தமிழ்த்தின விழா இம் மாதம் 24ம் தேதி புதன் கிழமை நடைபெறவிருக்கிறது.

அதிபர் கா. கணேசநாதன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில், பிரதம விருந்தினராக யாழ் கல்வி அதிகாரி திரு. க. கந்தசாமியும், சிறப்பு விருந்தினர்களாக சமூகசேவை உதவிப் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரமும், நல்லூர் வட்டாரக் கல்வி அதிகாரி த. சிவநாயகமூர்த்தியும், தொழில் அதிபர் திரு. க. கனகராசாவும் கலந்துகொள்வார்கள். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி பார்வதி கந்தசாமி பரிசில்களை வழங்குவார். (க)

0 0 0

(வவனியா)

செட்டிகுளம் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தின விழா செப்டம்பர் மாத கடைசிப்பகுதியில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

# பட்டம் வழங்கி கௌரவம்

(உடுவில்)

"அதர்மங்கள் தலைதூக்கும் வேளைகளில், சமய கட்டுப்பாடும் ஒழுக்கமும் குலையாதிருந்தால், அதர்மம் தோல்வியை தழுவிக் கொள்ளும் கோவில்களில் நித்திய நைமித்தியங்களும் உபன்யாசங்களும் நிகழ்வது சமய வளர்ச்சிக்கு இன்றியமையாதது"

உடுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தலைமையுரையாற்றிய கோவில் ஆதின கர்த்தா பிரம்மஸ்ரீ வா. முத்துக்குமாரசாமிசர்மா மேற்கண்டவாறு கூறினார்.

மேற்படி கோவில் மகோற்சவ நாட்களில் சமய உபன்யாசம் நிகழ்த்திய இளம் சைவப் புலவர் திரு. எம். எஸ். ஸ்ரீதயாளனுக்கு 'சிவஞான துரந்திரர்' என்ற பட்டமும் பொற்கிளியும் வழங்கி ஆசியுரை வழங்கப்பட்டது.

# திருமலையில் ——— சிவில் நிர்வாகத்தை சீராக்க முயற்சி!

[திருகோணமலை]

வன்செயல் நிறுத்தம் அமுலுக்கு வந்ததைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் சிவில் நிர்வாகத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டு வர திருகோணமலை அரசாங்க அதிபர் திரு கமாலஸ் பெரேரா ஈடுபட்டுள்ளார்.

தங்கள் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் பற்றிய மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளை இனிமேல் ஒழுங்காக அனுப்பி வைக்கும்படி அரசாங்க அதிபர் பிரதேச உதவி அரசாங்க அதிபர்களைப் பணித்துள்ளார்.

வன்செயல்கள் காரணமாக இதுவரை உதவி அரசாங்க அதிபர்கள் மாதாந்த அறிக்கைகளை திருமலைக் கச்சேரிக்கு அனுப்புவதில் ஸ்தம்பித நிலைமை இருந்து வந்தது.


# 5-வது ஆண்டு நினைவஞ்சலி

## திரு. சீனிவாசகம் நடராஜா

(கொட்டடி - யாழ். மாநகரசபை ஊழியர்)

மலர்வு: 27-1-1926 உதிர்வு: 18-7-1980



அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், குடும்பத்தின் மணிவிளக்காய் விளங்கிய தலைவனே, எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் புரிந்த உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

அன்பு மனைவி மகேஸ்வரி,
பிள்ளைகள்:- லலிதா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, ஆசிரியை),
கணேசராஜா (ஜேர்மனி), அனுசுயா,
சகோதரர்கள், மைத்துனர்கள், பெருமக்கள்,
மருமக்கள், உறவினர்கள்.

29, சீனிவாசகம் வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(4608)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

## திரு. கனகசபை செல்லத்தம்பி

மலர்வு: 9-5-1925

உதிர்வு: 23-6-1985



எங்கள் குடும்ப விளக்காயிருந்து, எல்லோருக்கும் ஊன்றுகோலாய் அமைந்து வழி நடத்திய எமது அன்புத் தெய்வமே! எம்மைப் பிரிந்து 1 மாதம் போனாலும் உங்கள் அன்பும், பண்பு, பாசமும் எங்கள் இதயத்தைவிட்டு என்றும் அகலாது ஐயா.

எண்ணரும் குணத்தினாலே எவருமே போற்ற வாழ்ந்தீர்
பண்பினால் உயர்ந்தீர் யார்க்கும் பாரிடை உதவிசெய்தீர்
கண்ணென எம்மை காத்து கல்வியுமளித்த நீவிர்
விண்ணினை அடைந்து ஓர் திங்கள் முடிந்ததும்
இன்றுதானே

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

(4613)

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
"KILL ALL KILL AGAIN'

லதா மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
ஆனந்பாபு—ஸ்ரீவிதா
பாடும் வானம்பாடி

மேபெயர் மினி
(கன்னாதிட்டி)
10-30, 2 30, 6-30
எம் ஜி ஆர்.—லதா
நேற்று இன்று நாளை

தேவி மினி சினிமா
(வின்ஸர் அருகாமை)
21-7-85 மட்டும்
10-30, 2-30, 6-30,
எம் ஜி.ஆர். சரோஜா
வீரப்பா நடிக்கும்
ஜெனோவா
(புதிய பிரதி)

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
Daily 10-30, 2-30, 4-30 p m.
A BRIDGE TOO FAR
விறுவிறுப்பூட்டும் காட்சிகள் நிறைந்த படம்

கஜேன்
மினி சினிமா
(சத்திரம் சந்தி அருகாமை)
10-30, 12-30, 2-30, 4-30, 6-30
5 OFFENS
WAR FILM
நாட்டின் விடுதலைக்காகப் போராடும் விடுதலை வீரர்களின் உணர்ச்சிக் காவியம்

பாலகன்
வீடியோ விஷன்
சாந்தி சினிமா முன்பாக
தினசரி 10-30, 2-30, 4-30, 6-30, 9-30
Richard Roundtree in
Shaft in Africa
(Adults only)
கறுப்பு இனத்தை சேர்ந்த ஒருவன் தனது இனத்தை காப்பாற்ற எடுக்கும் முயற்சியும் அவனை காதல் வலையில் சிக்கவைப்பதற்கு கன்னியர் படும் பாட்டையும் கண்டுகளிக்க இன்றே பாருங்கள்.
[கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்]

லிபேர்ட்டி மினி
வெலிங்டன் சந்தி அருகாமை
தினசரி 10-30, 12-30, 2-30, 4-45, 7-00
I spit on your Grave
(நீ பிணமானாலும் நான் வந்து பழிவாங்குவேன்)
4 கயவர்களால் ஓர் இளம் பெண் கெடூரமான முறையில் ஒருவர் பின் ஒருவராக கற்பழித்து சித்திரவதை செய்கிறார்கள். அப்பெண் தன்னை கற்பழித்த அந்த நால்வரையும் பழிவாங்கும் திரைச்சித்திரம். காணத் தவறாதீர்கள். சந்தர்ப்பம் மீண்டும் கிடையாது.
(இது கண்டிப்பாக வயது வந்தவர்கள் மட்டும்)

ஹரன்
வெண்திரையில்
10-30, 2-30, 4-30, 6-15
Julie,—Christie in
Demon Seed

உஷா மினி
(கே. கே. எஸ். வீதியில்)
தினசரி 10-30, 2-30 4-30, 6-30
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே. முந்துங்கள், தவறவிடாதீர்கள்.

சரவணபவன்
மினி சினிமா
(பெருமாள் கோவில்/ வெலிங்டன் தியேட்டர் சந்திக்குமிடையில்)
10-30, 2-30, 4-30, 7-00 மணி
HELL CATS
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மொடேர்ண்
மினி சினிமா
5 X 5 திரையில்
தினசரி 3 காட்சிகள்
இளமை
ஆனந்தபாபு-ஜீவிதா
அர்ஜுன்-அனிதா
புதிய வெளியீடு

குமரன்
மினி சினிமா
10-30, 12-30, 2-30, 4-30
Charles Bronson
Ten to Midnight
(Adults Only)

Windsor
வெண்திரையில்
Daily 10-30, 2-00, 4-30, 7-00
Blue Lagoon
வாலிபன் யுவதியின் காதல் ஓவியம். கன்னிப் பெண்ணின் காதல் சாகசங்களைக் காணத் தவறாதீர்கள்.
வயது வந்தவர்கட்கு மட்டும்.

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45, 9-00
Five Times All China Kung-Fu Champion
(1674-75-76-77-78-79)
Jet Lee in
Shaolin Temple
(Cinemascope—Color
(இதுவரை காணாத குங்பூ கராட்டி வீரசாகசங்கள் நிறைந்த சீன வீரர்களின் திகிலூட்டும்சம்பவங்களை நேரில் பார்ப்பதற்கு ஓர் சந்தர்ப்பம்]
கொழும்பு மாநகரில் 200 நாட்களுக்கு மேல் ஓடிய படம்.

லிடோ சினிமா
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்) பூர்ணிமா, ஜெயராம், இல்க்சுமிதா, ஜெய்சங்கர்

# சீருடையணிந்த. . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
காரைநகரை சேர்ந்த ஆறுமுகம் தம்பையா (63 வயது) நெடுங்கேணி அப்போதிகரி எஸ் தர்மலிங்கம் (45 வயது) ஆகியோரின் மரண விசாரணை நடைபெற்றது.

## காயமடைந்தவர் சாட்சியம்

க. லம்போதரநாதன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: மட்டக்களப்பு செல்வதற்கு நேற்றுக்காலை 4-30 மணிக்கு ஆலடி பஸ் தரிப்பில்10 பேர் வரை இருந்தனர். மட்டக்களப்பு இராஜேஸ்வரி ஸ்ரோஸில் பணியாற்றுகிறேன்.

## இரண்டு கவசவண்டி

காலை 5 மணிக்கு வாகனம் வரும் சத்தம் கேட்டது பஸ் வருவதாக எண்ணி எல்லோரும் எழுந்து பஸ்ஸில் ஏறத் தயாரானோம். அப்போது கடற்படையினர் கவசவண்டி இரண்டு வந்து பஸ் தரிப்பில் நின்றன

வாகனத்தில் வந்தவர்கள் இறங்கி படபட என்று துப்பாக்கியால் சுட்டார்கள் அவர்களில் கொஞ்சப்பேர் பஸ் தரிப்பிலிருந்து ஓடினார்கள் பயத்தினால் நாங்கள் படுத்து விட்டோம். வெடிச்சத்தம் தொடர்ந்து கேட்டது. கவச வண்டிகளில் வந்தவர்கள் மீண்டும் ஏறிவரும் போதும் சுட்டார்கள் எனது இடது காலில் துப்பாக்கி சூடுபட்டது. இரத்தம் வழிந்தோடியது பின் லொறி ஒன்று கொண்டு வந்து காயமடைந்தவர்களை யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றார்கள்.

## லொறியில் சோதனை

வழியில் சக்கள ஓடையில் இரண்டு வாகனங்களில் வந்த கடற்படையினர் லொறியை மறித்தார்கள். எல்லோரையும் கீழே இறக்கி கைகளைத் தூக்கி நிற்கும்படி கூறி சோதனைசெய்தார்கள். பின்னர் செல்ல அனுமதித்தனர். இறந்த தம்பையா எனது ஒன்றவிட்ட அண்ணராகும்.

## சோதிநாதனின் மரண விசாரணை

முதலில் சு சோதிநாதனின் மரண விசாரணை நடந்தது. தந்தை அ மு. சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில், இறந்தவர் தனது சிரேஷ்ட புத்திரன் என்றும், காலையில் பேத்தியாரின் ஆறும் மாதப் பூசைக்குச் சாமான்கள் வாங்கச் சந்தைக்குப் புறப்பட்டாரென்றும், சிறிது நேரத்தில் வெடிச் சத்தங்கள் கேட்டதாகவும், சிவகுமார் என்பவர் வந்து சோதியைச் சுட்டுப்போட்டார்கள் எனத் தம் மனைவியிடம் கூறியதாகவும் சொன்னார்.

வி. சிவகுமார் சாட்சியமளிக்கையில், காலையில் வெடிச் சத்தம் கேட்டதாகவும், பஸ் தரிப்புக்குப் போனபோது சோதிநாதன் இரத்த வெள்ளத்தில் சுடுபட்டுக் கிடந்தார் என்றும், வேறு 3 பேர் காயத்துடன் கிடந்தார்கள் என்றும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

அடுத்ததாக ஆறுமுகம் தம்பையாவின் (63 வயது) மரண விசாரணை நடைபெற்றது சாட்சியமளித்த மனைவி கண்ணகை அம்மா; காலையில் கணவர் மட்டக்களப்புக்குச் செல்லப் புறப்பட்டார் என்றும், தனது மகன் பத்மநாதன் அவரைக் கூட்டிச் சென்றதாகவும், சிறிது நேரத்தில் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும், பின் மகன் வந்து சுடுபட்ட ஐயாவை லொறியில் யில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகிறார்கள் என்று கூறியதாகவும், பின்னர் தான் ஆஸ்பத்திரிக்கு வந்தபோது அவர் இறந்துவிட்டதாகவும் அறிந்தேன் என்றார்.

த. பத்மநாதன் என்பவர் சாட்சியமளிக்கையில், தகப்பனுடன் ஆலடி பஸ்தரிப்புக்கு வந்ததாகவும், அங்கு வேறு 10 பேர் நின்றதாகவும், வாகனம் ஒன்று வரும் சத்தம்கேட்டு எல்லோரும் பஸ் என்று நினைத்து எழுந்து நின்றதாகவும், அப்போது ஒரு கவச வண்டி வந்து நின்றதாகவும் கூறினார். அதன் பின் மற்றொரு பெரிய வாகனம்வந்து கேட்டை அணைத்துவிட்டு நின்றதாகவும் பின் வெடிச் சத்தம் கேட்டதும் தாங்கள் படுத்துவிட்டதாகவும் 15 தடவைக்குக் குறையாமல் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் இரு வாகனங்களும் சென்றபின் எழுந்து பார்த்தபோது அருகில் தந்தை காயத்துடன் கிடந்ததாகவும் தந்தை உட்பட 5 பேர் காயத்துடன் கிடந்ததாகவும் கூறினார். லொறியொன்றில் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் கூறினார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு மரண விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

அப்போதிக்கரி எஸ். தர்மலிங்கத்தின் மரண விசாரணை கடைசியாக நடைபெற்றது இம்மரண விசாரணையில் பி சிவசோதி சாட்சியமளிக்கையில், இறந்தவர் தமது மைத்துனர் என்றும்10 நாள் லீவில்வந்து நின்றவர் காலையில் நெடுங்கேணிக்குச் செல்ல ஆலடி பஸ் தரிப்புக்கு சென்றாரென்றும், வெடிச்சத்தம் கேட்டு ஆலடிப் பக்கம் ஓடியபோது தப்பிவந்த குணராசா, ஆலடியில் கடற்படையினரால் சுடப்பட்டு கிடக்கிறார்கள் அதில் உன் மச்சானும் ஒருவர் என்று கூறியதாகவும் சொன்னார்.

ஆஸ்பத்திரிக்கு லொறியில் காயமடைந்தவர்களை ஏற்றி வந்தபோது சக்களா ஓடையில் கவசவண்டியில் சீருடையில் வந்த கடற்படையினர் லொறியை மறித்து சோதனையிட்டதாகவும், சடலங்களையும், காயமடைந்தவர்களையும் இறக்கிப் பார்த்தார்கள் என்றும்சுமார் 20 நிமிடம் சோதனையிட்டார்கள் என்றும் கூறினார். குண்டுவீசியவர்களை தெரியுமா? என்றும் அவர்கள் கேட்டதாகவும் கூறினார்.

வி பொன்னுத்துரை சாட்சியமளிக்கையில் இறந்தவர் தமது மருமகன் என்றும் காலையில் வெடிச் சத்தம் கேட்டுப் படலைக்கு போனபோது இரண்டுபேர் வந்து மருமகன் தருமலிங்கத்தை கடற்படையினர் சுட்டுவிட்டார்கள்என்று கூறியதாகவும், தான்போனபோது 4, 5பேர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்கள் என்றும் கூறினார்.

பஸ்தரிப்பில் கிடந்த வெற்று குண்டுகளை எடுத்து வைத்திருப்பதாகவும், அவற்றை சமர்ப்பிக்க விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திபோடப்பட்டது. [க]

# ஆசிரியர்..

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
தலைவர்; திரு. மு. திருஞானசம்பந்தபிள்ளை, செயலாளர்; திரு செ, ரோகடீஸ்வரன், பொருளாளர்: திருமதி ப. மகேசன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டன. 21 உறுப்பினர் கொண்ட முகாமைக்கு குழுவும் தெரியப்பட்டது

# ஓய்வூதியம்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
மாதாந்தம் இறக்கும் ஓய்வூதியம் பெறுபவருடைய முழு விபரங்களையும் யாழ். ஆய்வு செயலக ஓய்வூதியக் கிளைக்கு அனுப்பிவைக்குமாறும் உதவி அரசாங்க அதிபர்களை இவ்விடயத்தில் கவனம் எடுக்குமாறும் மேலும் இச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரான்லி மினி
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30 4-30, 6-30
Escort Girls
வயது வந்தவர்களுக்கு மட்டும்

# வயோதிபர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
துப்பாக்கி குண்டினால் பிளந்து மூளை சிதறி காணப்பட்டது. தர்மலிங்கம் உடலில் இரத்தக் கறைகள் காணப்பட்டன. காயமடைந்த லம்போதரனுக்கு காலில் குண்டுபாய்ந்திருந்தது.

பிரேதபரிசோதனையின் பின்னர் சடலங்களை குடும்பத்தினரிடம் ஒப்படைக்குமாறு யாழ். நீதவான் பணித்திருந்தார்.

நமது காரைநகர் நிருபர் தகவல் தருகையில் காலை 5-30 மணிக்கு புறப்பட்டுவரும் பஸ்ஸில் வேலைகளுக்கும் சந்தைக்கும் செல்வதற்காக காத்திருந்தவர்களே கடற்படையின் சூட்டுக்கிலக்கானதாகத் தெரிய வருவதாக அறிவித்துள்ளார்.

# வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இடங்களிலுள்ள பொலிஸ்நிலையங்களுக்கு விஜயம்செய்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அங்குள்ள பாதுகாப்பு நிலைமைகளை அவதானித்தார்.

தீவிரவாதத் தலைவர் ஒருவர் இங்குள்ள தமது சகாக்களுக்கு இரகசிய வானொலி மூலம் விடுத்த உத்தரவொன்றை இலங்கை ஆயுதப் படையினர் தமது இரகசிய வானொலிமூலம் பெற்றுக்கொண்டதையடுத்தே சகல ஆயுதப் படை முகாம்களும் உஷார்நிலையில் வைக்கப்படுவதற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (மா)

# அத்தியாவசிய...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
பொது மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளான போக்குவரத்து, மருத்துவம், கூட்டுறவு, உணவு, எரிபொருள் விநியோகம், மின்சாரம் சமுதாயத்திற்கு சேவையாற்றும் சகல நிறுவனங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகள் சீர்குலைக்கப்படுவது எமது விடுதலைப் போரினை பின்தள்ளும் ஒன்றாகவே அமையும். இத்தகைய துறைகளில் வீடுதலைக்குப் போராடுகின்ற தாபனங்கள் நடாத்தும் கொள்ளைகளும், சீர்குலைப்பு வேலைகளும் எமது இனத்தின் தற்கொலைக்குச் சமனானது என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இந்த மண்ணையும், மக்களையும் நேசிக்கின்ற நாம் எமது மக்களின் விடுதலைப் போராட்டத்தை சரியான பாதையில் முன்னெடுக்க அணி திரண்டு வரும் சக்திகள் இத்தகைய சீர்குலைப்பு வேலைகளையோ அல்லது சீர்குலைக்கக்கூடிய நடத்தைகளை இனிமேல் மேற்கொள்ளமாட்டோம் என்று உறுதியளிப்பதோடு, இத்தகைய செயல்களை வன்மையாக கண்டிக்கிறோம். என்பதைப் பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

அதேவேளையில் விடுதலைப் போராட்டம் முன்னெடுக்கப்படும் சூழலில் விடுதலை தாபனங்களுக்கு ஏற்படும் அவசர அவசிய தேவைகளுக்கு குறிப்பாக வாகனம் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொது மக்கள் ஒத்துழைக்குமாறு கோருவதுடன் பொதுமக்களைத் துன்புறுத்தும் வண்ணம் இயக்கங்கள் நடந்துகொள்ளக் கூடாது என்பதையும் தெளிவாக்குகின்றோம்.

மேற்குறிப்பிட்ட சேவை நோக்கங்களைக்கொண்ட தாபனங்களை சீர்குலைக்கும் எந்த இயக்கத்தையும் மக்கள் இனங்கண்டுகொள்ளும்படி கேட்டுக்கொள்வதுடன் அவ்வியக்கத்தினை நாம் பகிரங்கப்படுத்துவதுடன் நிவாரணத்திற்கான வற்புறுத்தலையும் மேற்கொள்ளுவோமென உறுதியளிக்கிறோம்". [மா]

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

## தட்டுப்பாடு இல்லை

[திருகோணமலை]

திருகோணமலை ஆஸ்பத்திரி மற்றும் அரசினர் வைத்திய சாலைகளில் மருந்துத் தட்டுப்பாடு கிடையாது என்று பிராந்திய சுகாதார சேவை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

இதனையடுத்து வன்செயல்களினால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு தேவையான சுகாதார வசதிகளைச் செய்துகொடுக்கும்படி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியை அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

### இலங்கை இனப்பிரச்னை

# தீர்வுக்கு உதவிகள் அனைத்தையும் செய்யத்தயார்

## ரஜீவ் மீண்டும் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு சாத்தியமான உதவிகள் அனைத்தையும் அளிப்பதற்கு தான் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி மீண்டும் தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற நிர்வாக கூட்டத்தில் உரையாற்றும் பொழுதே திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெவர்த்தனவுடன் தான் நடத்திய பேச்சுக்கள் பற்றியும் அவர் இங்கு குறிப்பிட்டார்

இப்பிரச்சனைக்கு தீர்வு காண்பததில் நம்பிக்கையுடன் இருப்பதாகவும் திரு ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். (து)

## தேசிய சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 1006 வது தேசிய லொத்தர் சுவீப் டிக்கெட் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:
**04 P 0202**
1, 95,400 ரூபா

2-வது பரிசு:
**17 Z 0099**
73,275 ரூபா

3-வது பரிசு:
**12 D 0120**
24,425 ரூபா

## பரீட்சை நிறுத்தப்பட்டதால் மாணவர் அவதி!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கல்வி வட்டார பகுதிபாடசாலைகளில் கடந்த சனிக்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் திடீரென நிறுத்தப்பட்டதால் பரீட்சை எழுதவந்த மாணவர்கள் திரும்பிச் சென்றனர்,

யாழ்ப்பாணத்தை தவிர்ந்த மற்றும் கல்வி வட்டாரங்களிலுள்ள சகல பாடசாலைகளிலும் இப்பரீட்சைகள் நடைபெற்றதாக கூறப்படுகிறது.

7-ம் வகுப்புமுதல் 10-ம் வகுப்புவரையுள்ள மாணவர்களுக்கு கடந்த சனிக்கிழமை சமயம், தமிழ், உடற்கல்வி, தொழிற்கல்வி பாடங்கள் நடைபெறவிருந்ததாக கூறப்படுகிறது.

யாழ் வட்டார பாடசாலைகளுக்கு கேள்வித்தாள்களை வழங்காததினால் பரீட்சைகளை நடத்தமுடியவில்லை என கல்லூரி அதிபர் ஒருவர் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும ஒரே கேள்வித்தாள் என்றபடியினாலும் யாழ். கல்விவட்டாரத்தை தவிர்ந்த மற்றும்பாடசாலைகளில் இப்பரீட்சைகள் கடந்த சனிக்கிழமை நடந்து முடிந்து விட்டமையினாலும் யாழ். கல்விவட்டாரத்திற்கு இப்பாடங்களில் வேறு கேள்வித்தாள் தயாரிப்பதுபற்றி ஆலோசித்து வருவதாக கூறப்படுகிறது. (அ)


## மரண அறிவித்தல்

### திருமதி ம. ஆனுசிப்பிள்ளை

சில்லாலை தெற்கு, சென் ஜேம்ஸ் வீதியைச் சேர்ந்த திருமதி. மரியாம்பிள்ளை ஆனுசிப்பிள்ளை காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு. மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியதாஸ் திரேசம்மா, கிதபொன்கலன், செபஸ்ரியாம்பிள்ளை (ட்றைவர்) லூர்தம்மா இயேசுதாசன் (ஆசிரியர் சம்பத்திரியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லூர்தம்மா அகுஸ்தீன்பிள்ளை, சிசிலியா, மரியம்மா, சூசைப்பிள்ளை டெய்சி, ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் (23-07-85] இன்று செவ்வாய்க்கிழமை பி ப. 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும். இதை உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.
தகவல்: யேசுதாசன். 4627

## மரண அறிவித்தல்

### பொன்னையா நவரட்னம்

புலோலியைச் சேர்ந்த இளைப்பாறிய பிரதி தொழில் ஆணையாளர் பொன்னையா நவரட்னம் காலமானார். இவர் பாக்கியத்தின் அன்புக்கணவரும், திருமதி நவமணி, தெய்வேந்திரன் (Abudhabi Sheration hotel), லோகராஜா U K), நவமலர் இராஜநாயகம் (Brigh-ton Hotel) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெகநாதன் (Accountant Zambia), பூர்ணியம்மா, இந்திரா தேவி. பிரகாஸ்பாலன் (Engineear U S. A), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்பு மாமனும், அமரர் Dr. இராஜசிங்கம் W H O.), அமரர் ரத்தினசிங்கம்(Accountant Land Development Depot . அமரர் நடராசா (முன்னைநாள் செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர்), இராஜேந்திரம் (Administrative Officer Regional Dir-ector Health Services Jaffna), பாலசிங்கம் (உப அதிபர் ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை . இராசம்மா தங்கம்மா அமரர் செல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சஞ்சயன், அச்சுதன். மயூர், சுரேன், ஹேமிலா, சர்மிலா, ஹேமேஷ், மோகன், மயுரேஷ் ஆகியோரின் பாட்டனுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள் 25-7-85 வியாழக்கிழமை பிற்பகல் அன்னாரது இல்லமாகிய புலோலி கிழக்கு. காக்கியவளவில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக ஆனைவிழுந்தான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 46¿5

## மரண அறிவித்தல்

### தருமலிங்கம்
(வைத்திய அதிகாரி நெடுங்கேணி)

தருமலிங்கம் (வைத்திய அதிகாரி நெடுங்கேணி) அகால மரணமானார். இவர் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் சி. க. ஆ. சின்னத்தம்பியின் அருமைப் புதல்வரும், கலாநிதியின் அன்புக் கணவரும், சிவதர்சினி, ஸ்ரீதரன், சிவப்பிரியா, சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், முன்னாள் பிரபல வர்த்தகர் திரு. திருமதி வை பொன்னுத்துரை (மொரட்டுவ) யின் அன்பு மருமகனும், கமலாதேவி, விமலாதேவி, சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராசதுரை, நாகராசா, கற்பகநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக (24-07-85) புதன்கிழமை காலை 8 மணியளவில் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 4629

## மரண அறிவித்தல்

### திருமதி அருணாசலம்முத்துப்பிள்ளை

காரைநகர் - பாலாவோடை அருணாசலம் முத்துப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற கந்தையா அருணாசலத்தின் மனைவியும், காலஞ்சென்ற பரராசசிங்கம், செல்லத்துரை, கணேஷபிள்ளை (உரிமையாளர்: அருணா கோப்பிரேஷன், உலேவெலை), பாக்கியம், சுந்தரம்மா, இலட்சுமி, செல்லம்மா ஆகியோரின் தாயாரும், கண்ணம்மா, சரஸ்வதி, லோகாம்பிகை, முருகேசு, வைத்திலிங்கம், நடராசா, கந்தசாமி (உரிமையாளர்: அருணா ஸ்ரோர்ஸ், வவனியா) ஆகியோரின் மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 23-7-85 செவ்வாய் பிற்பகல் 1-மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் தில்லை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இதனைஏற்றுக் கொள்ளவும்.
தகவல்:
4628 அ. கணேஷபிள்ளை

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடராஜா

புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு கல்வியங்காட்டைச் சேர்ந்த திருமதி மகேஸ்வரி நடராஜா காலமாகிவிட்டார். இவர் ஓய்வு பெற்ற ஆசிரியர் நடராஜாவின் அன்பு மனைவியும், மகேஸ்வரன் (உரிமையாளர் 'நல்லூர் றேடேர்ஸ்' கொக்குவில் கிழக்கு கொக்குவில். Agent-இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்), இரவீந்திரன் (Male Nurse அரசபணிமனை வைத்தியசாலை Oman , லலிதா, பத்மலோஜினி, இராதா (ஆசிரியர் விவேகானந்த மகா வித்தியாலயம். கொழும்பு), சந்திரா (சவூதி அரேபியா) நேசராஜா (கிழக்கு ஜேர்மனி), வரதராஜா (கிழக்கு ஜேர்மனி) அன்புத் தாயாரும், க நடேசன் (அரச நிலஅளவையாளர் பொலனறுவை) ஆகியவரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.
தகவல்:
ந மகேஸ்வரன்
(உரிமையாளர் நல்லூர் றேடேர்ஸ் கொக்குவில்
4630

## மரண அறிவித்தல்

### திருமதி நிர்மலா நடேசன்

திருமதி நிர்மலா நடேசன் கொழும்பு தேசிய அபிவிருத்தி வங்கி திட்டமிடல் உத்தியோகத்தர் அகால மரணமானார் இவர் வறுத்தலைவிளான் தெல்லிப்பழையைச் சேர்ந்தவரும், கொழும்பு தேசிய அபிவிருத்தி வங்கி திட்டமிடல் உத்தியோகத்தர் தம்பிராசா நடேசனின் மனைவியும், திருமதி சிவக்கொழுந்து தம்பிராசாவின் அன்பு மருமகளும் புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராஜா தவமணி தம்பதிகளின் அன்பு மகளும், யமுனா (லண்டன்), நந்தகுமார் (லண்டன்), அமுதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதிகள் சரோஜா. பாலேந்திரா (அவுஸ்திரேலியா), லலிதா காந்தமூர்த்தி (Baharain), முருகானந்தன் (Oman), விமலா மோகன், செல்வி ரஜனி. மகேசன் (Oman) ஆகியோரின் மைத்துனியும், திரு.. திருமதி கதிரவேலு சட்டத்தரணி, திரு , திருமதி சிவபாதன், திரு., திருமதி நேமிநாதன் (சட்டத்தரணி, லண்டன்), காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் நா சி. செல்லையா, காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் நா சி சின்னத்துரை, நா சி. மயில்வாகனம், இளைப்பாறிய ஆசிரியர் நா சி. சரவணமுத்து. காலஞ்சென்ற நா. சி சுந்தரம்பிள்ளை, நா. சி. கனகசபை, ஆகியோரின் பெருமகளும் திரு , திருமதி சற்குணநாதன், திரு , திருமதி பேரின்பநாதன் திருமதி செல்லத்தம்பி ஆகியோரின்மருமகளும், ஆவார். அன்னாரின் தகனக் கிரியைகள் 23-7-85 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணியளவில் புங்குடுதீவு கிழக்கு மணல்காடு மயானத்தில் நடைபெறும். (4615)


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P.Box 49, Telegram Eelanadu, Telephone, 22389 ,24126,